Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து

SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT சீமேந்து ராம்கோ

(சி-653)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 23 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 03 (07.03.2003) வெள்ளிக்கிழமை இதழ் :155

## மகளிர் விவகார உபகுழு செயலகம் கிளிநொச்சி, கொழும்பில் அமையும்



உபகுழுவின் ஆலோசகர் கலாநிதி அஸ்ரிட்டிற்கு கைலாகு கொடுக்கும் மகளிர் அரசியற்பொறுப்பாளர் தமிழினி.

(கிளிநொச்சி)

மகளிர் விவகாரங்களுக்கான உபகுழுவின் முக்கிய செயலகம் கிளிநொச்சியிலும், மற்றுமோர் அலுவலகம் கொழும்பிலும் அமையவுள்ளன. நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற மகளிர் விவகாரங்களுக்கான உபகுழுக் கூட்டத்தின் இரண்டாம் நாளின் இறுதியில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், எதிர்காலக் கூட்டங்களில் இரண்டு தரப்புக் குழுவினரும் தமக்கென இரண்டு ஆலோசகர்களை அழைத்து வரவும், அமையும் இரண்டு அலுவலகங்களுக்கான அலுவலர்களை நியமிப்பது குறித்து அடுத்த கூட்டத்தில் ஆராய்வது என்றும் நேற்றைய சந்திப்பின் போது முடிவு செய்யப்பட்டது.

நேற்றைய சந்திப்பில் மேலும் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இந்த உபகுழுவின் செயற்பாடுகளுக்கு பல்வேறுபட்ட சர்வதேச உதவிவழங்கும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## எமது மக்களின் நெருக்கடிகள்; தெற்குப் பெண்களிடம் கூறினோம்

### மகளிர் உபகுழு கூட்டம் குறித்து தமிழினி கருத்து



நிரந்தரமில்லாத தீர்வுகளின் அடிப்படையில் நின்று கொண்டு எவ்விதமான நடவடிக்கைகள் பற்றியும் இப்போது பேசமுடியாது. எனவே சமாதானத்திற்கான புறச்சூழல் தற்போது அவசியமானது என்பதனை தென்னிலங்கைப் பெண்கள் தரப்பிடம் வலியுறுத்தியுள்ளதாக, மகளிருக்கான உபகுழுக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் தரப்பினருக்கு தலைமை தாங்கிய, விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி சுப்பிரமணியம் கூட்டத்தின் முடிவில் ஊடகவியலாளருக்கு கருத்து வெளியிடுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் - பொருத்தமான புறச்சூழலே முதலில் ஏற்பட வேண்டும். அந்தப் புறச்சூழல் என்பது நம்பிக்கையான சமாதானச் சூழல் ஆகும்.

மேலும், தென்னிலங்கைப் பெண்கள் அரசதரப்புப் பிரதிநிதிகளாக பெண்களுக்கான உபகுழுவில் அங்கம் வகித்துள்ளனர். அவர்களிடம் எமது பெண்கள், குழந்தைகள் எதிர்கொண்ட (10 ஆம் பக்கம் பார்க்க)

# பரீட்சார்த்தமாக பாதுகாப்பு வலயங்களை அகற்றி

# மக்களை மீளக் குடியமர்த்திப் பார்க்கட்டும் அரசு!

## கோருகின்றார் யாழ். ஆயர்

(யாழ்ப்பாணம்)

**வடபகுதியில் உள்ள படையினரின் உயர்பாதுகாப்பு வலயத்தைப் பரீட்சார்த்த அடிப்படையிலாவது நீக்குவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். இவ்வாறு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார். வெளிநாட்டு பத்திரிகையாளர் மத்தியில் பேசும்போதே யாழ். ஆயர் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளார்.**

வடபகுதியில் அரசு பிரகடனம் செய்திருக்கும் உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தமது சொந்த ஊர்களுக்குச் சென்று தமது வீடுகளில் குடியிருக்க முடியாமல் உள்ளது.

இவ்வாறு மக்களைத் தமது வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்காமல் படையினர் தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வருகின்றனர். இது அவர்களின் அடிப்படை உரிமைகளை உதாசீனம் செய்யும் செயலாகும்.

வடபகுதியில் மக்களின் வாழ்வில் முழுமையான இயல்புநிலையை ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்காக உயர் பாதுகாப்பு வலயத்தை பரீட்சார்த்த (10 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க நாய்கள் வரும் கண்ணிவெடிகளை அகற்ற!

(கொழும்பு)

கண்ணிவெடிகளைக் கண்டுபிடித்து அகற்றுவதற்காக அமெரிக்க நாய்கள் இலங்கை வருகின்றன. பிரதமரின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனின் கோரிக்கையையடுத்தே அமெரிக்காவிலிருந்து கண்ணிவெடிகளை மோப்பம் பிடிக்கக்கூடிய ஆறு நாய்கள் கொண்டுவரப்படவுள்ளன.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மீள்குடியேற்ற நடவடிக்கைக்கு பெரும் இடையூறாக இருக்கும் மிதிவெடிகள், கண்ணிவெடிகளை அகற்ற இந்த நாய்கள் உபயோகப்படுத்தப்படும் எனவும், இவற்றைக் கையாள உள்ளூர் வாசிகளுக்கும் படையினருக்கும் பயிற்சிகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான ரூபா ஐந்து மில்லியன் நிதியை அமெரிக்காவே வழங்கவுள்ளது.

## அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்க கூட்டமைப்பு எம்.பிக்கள் வன்னிக்கு!

### சங்கரியைத் தவிர 14 பேரும் செல்கின்றனர்

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று, விடுதலைப் புலிகளின் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்கவுள்ளனர்.

இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள, விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடுவப் பணியகத்தில் நடைபெறவுள்ள இச்சந்திப்பில், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் கலந்து கொள்கின்றார்.

கூட்டமைப்பைச் சேர்ந்த 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் - இச் (10 ஆம் பக்கம் பார்க்க)

## களுத்துறையில் 24 கைதிகள் உடல்நிலை கவலைக்கிடம்!

### பதினான்கு பேருக்கு இரத்த வாந்தி

களுத்துறைச் சிறைச்சாலையில் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ள தமிழ் அரசியற் கைதிகளில் இருபத்திநான்கு பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது. இவர்களில் பதினான்கு பேர் இரத்த வாந்தி எடுத்து வருகின்றனர் என, களுத்துறைச் சிறைச்சாலைக்கு நேற்று விஜயம் செய்து சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியற்கைதிகளைப் பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்று சிறைச்சாலைக்கு விஜயம்செய்த நாடாளுமன்ற உறுப்பி (10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



கொழும்பில தமிழ் ம்க்கள் எண்டதை பேசாமல் 'பதிவு மக்கள்' எண்டு மாத்திட நினைக்கினமோ...

## கொழும்பில் நடக்கும் பொலிஸ் பதிவு; தொடர்பில்லை என்கிறார் லியனகே!

### பொய் என மனோ கணேசன் குற்றச்சாட்டு

தலைநகரில் கடமைபுரியும் நாலாயிரம் பொலிஸாரில் நாற்பது பேர் முட்டாள்களாக இருப்பார்கள். அதற்கு நாங்கள் என்ன செய்யமுடியும் என, கொழும்பு பிரதிப்பொலிஸ் மா அதிபர் போதி லியனகே, கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனிடம் தெரிவித்திருக்கின்றார். பம்பலப்பிட்டியில் உள்ள கணினி நிலையங்கள், தொலைத்தொடர்பு நிலையங்கள் மற்றும் சைவ ஹோட்டேல்கள் போன்றவற்றில் பணிபுரியும் தமிழர்களைப் பதிவுசெய்யுமாறு விண்ணப்பப்படிவங்கள் பம்பலப்பிட்டிப் பொலிஸாரினால் நேற்று விநியோகிக்கப்பட்டன.

இது தொடர்பாக, மக்கள் முறையிட்டதையடுத்து போதி லியனகேயுடன் தொடர்பு கொண்டு மனோ கணேசன் எம்.பி. நிலைமையை விளக்கிக் கூறியபோதே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 94 மீனவர்கள் விடுவிப்பு

அண்மையில் இலங்கை மீனவர்களால் பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்களில் 94 பேர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர். எஞ்சிய 24 பேரும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் படகோட்டிகளும் அடங்குவர்.

விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் (10 ஆம் பக்கம் பார்க்க)

# அதிர்ஷ்ட வாரம் 07.03.2003 - 13.03.2003

## மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

தொழில் முன்னேற்றமுண்டு. எடுத்த முயற்சி எளிதில் கைகூடும். பிரயாணத்தால் நன்மை உண்டு. பொருளாதார நிலை சீராக இருக்கும். தேக சுகம் உண்டு. விரோதிகள் கூட நண்பர்கள் ஆவார்கள். வாக்கு வசீகரமுண்டு பெண்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சியான சம்பவங்கள் நிகழும். களஸ்திர சுகமுண்டு. மாணவர்கள் முன்னேற்றத்துடன் கல்வியைத் தொடர்வார்கள்.

## இடபம்

கார்த்திகை 2,3,4 ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம், 1,2ஆம் பாதம்

காரியதாமதமுண்டு. உடல் நிலை பாதிக்கப்படும். பிரயாணத்தால் அலைச்சலைக் கொடுக்கும். அதிக பிரயாசையும் சொற்ப பலனும் கிடைக்கும். தொழில் துறைகளில் அதிக முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாது. மனம் ஒரு நிலையில் இராது. வியாபாரிகளுக்கு அதிக லாபத்தை எதிர்பார்க்க முடியாது. பெண்கள் குடும்பத்தில் பிரச்சினைகளை எதிர்நோக்குவர். மன அமைதி இராது. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமுண்டு.

## மிதுனம்

மிருகசீரிடம், 2,3 ஆம் பாதம் திருவாதிரை, புனர்பூசம், 1,2, 3 ஆம் பாதங்கள்

விவாக முயற்சிகள் வெற்றியளிக்கும். பணப்புழக்கம் இருக்கும். தொழில் முன்னேற்ற முண்டு. வாகனம் நன்மை தரும். காரிய அனுகூலமுண்டு. மனம் சந்தோஷமாக இருக்கும். வியாபாரிகளுக்கு லாபம் கிடைக்கும். பெண்களுக்கு பொன் பொருள் சேர்க்கை உண்டு. கணவர் பிள்ளைகளின் ஆதரவுண்டு . மாணவர் கல்வியில் பின்னடைவு காணப்படும்.

## கர்க்கடகம்

புனர்பூசம், 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

உடல் நிலை பாதிக்கப்படும். பிரயாணக் கஷ்டமுண்டு. விவாக முயற்சிகள் தடைப்படும். தொழிலில் எதிரிகள் ஆதிக்கம் வலுவாக இருக்கும். மனச் சோர்வு காணப்படும். வியாபாரிகளுக்குபொருள் நஷ்டத்தைக் கொடுக்கும். பெண்களுக்கு குடும்பத்தில் அமைதி இராது. வைத்திய செலவு அதிகமிருக்கும். மாணவர்களின் கல்வியில் அதிக முன்னேற்றம இராது.

## சிங்கம்

மகம், பூசம், உத்தரம், 1ஆம் பாதம்

வெளியூரில் இருந்து உதவிகள் கிடைக்கும். பணப்பற்றாக் குறையிருக்கும். பிரயாணத்தால் அதிக நன்மை இராது. தொழில் துறையில் சமபலன் இருக்கும். உடல் ஆரோக்கியமுண்டு. விவாக முயற்சிகள் கைகூடும். வியாபாரிகளுக்கு லாபம் கிடைக்கும். குடும்பத்தில் சுமுக நிலை காணப்படும். களஸ்திர சுகம் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவர்.

## கன்னி

உத்தரம், 2,3,4 ஆம் பாதம், அத்தம், சித்திரை, 1,2ஆம் பாதம்

தொழில் முன்னேற்றமும் சிறப்பும் உண்டு. நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். பொருளாதார நிலை சீராக இருக்கும். விவாக முயற்சிகள கைகூடும். மனஅமைதி இருக்கும். வியாபாரிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். புதிய முதலீடுகள் செய்யலாம். பெண்களுக்கு குடும் புசுகம், பெரியோர் ஆதரவு உண்டு. மாணவர் கல்வியில் முன்னேற்றமிருக்கும்.

## துலாம்

சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, விசாகம், 1,2,3ஆம் பாதம்

பொருளாதார கஷ்டமுண்டு. மன அமைதி பாதிக்கப்படும். கவலைகள் அதிகரிக்கும். வீண்பழி, அவமானம் போன்றவற்றை சந்திக்க நேரிடும். தொழில்துறை பாதிக்கப்படும். வியாபாரிகள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியிருக்கும். பிள்ளைகளால் கவலையுண்டு. மாணவர்கள் உற்சாகமின்றிக் காணப்படுவர்.

## விருச்சிகம்

விசாகம், 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

தொழில்துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படும். திருமண முயற்சிகள் வெற்றிதரும். எடுத்த முயற்சி வெற்றிதரும். மனம் சந்தோசமாக இருக்கும். வாகன யோகம் உண்டு. உடல்நிலை நல்ல நிலையில் இருக்கும். வியாபாரிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பெண்களுக்கு கணவர் பிள்ளைகளால் ஆதரவுண்டு. மாணவர் கல்வியில் முன்னேற்றம் காணப்படும்.

## தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்

தேகசுகம் பாதிக்கப்படும். மன அமைதி இராது. பிரச்சினைகள் தலை தூக்கும். விவாக முயற்சிகள் தடைபடும். வாகன நஷ்டமுண்டு. தொழில் துறையில் பின்னடைவு காணப்படும். வியாபாரிகளுக்கு போட்டி அதிகம் இருக்கும். லாபத்தை எதிர்பார்க்க முடியாது. பெண்கள் வியாதிகளினால அவதிப்படுவர். மாணவர்கள் கல்வியில் அதிக முன்னேற்றமிராது.

## மகரம்

உத்தராடம், 2,3,4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதம்

வாக்கு வசீகரம் உண்டு. எடுத்த முயற்சி இலகுவில் வெற்றியளிக்கும். பெரியோர் மதிப்புண்டு. தொழில முன்னேற்றமுண்டு. பொருள் வரவுக்கு இடமுண்டு. உடல் ஆரோக்கியம் நனறாக இருக்கும். பெண்களுக்கு ஆபரண சேர்க்கை உண்டு. குடும்பத்தில் சந்தோஷம் காணப்படும். வியாபாரிகள் லாபமடைவர். மாணவர் கல்வியில் முன்னேற்றம் காணப்படும்.

## கும்பம்

அவிட்டம், 3,4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1,2,3ஆம் பாதம்

தேகசுகம் பாதிக்கப்படும். தொழிலில் சமநிலை காணப்படும். மன அமைதி இராது. பகைவர்களால் தொல்லைகள் உண்டு. பொருளாதாரக் கஷ்டமுண்டு. விவாக முயற்சி தாமதமாகும். நண்பர்கள் கூட பகைவராக மாறுவர். வியாபரிகளுக்கு போட்டி பொறாமை அதிகம் இருக்கும். அதிக லாபம் எதிர்பார்க்க முடியாது. பெண்களுக்கு குடும்பத்தில் குழப்பங்கள் கொடுக்கும். மாணவர்கள் சோர்ந்து காணப்படுவர்.

## மீனம்

பூரட்டாதி, 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி

காரிய வெற்றியுண்டு. பொருள் வரவுக்கு இடமுண்டு. பொருளாதார நிலை சீராக இருக்கும். தொழில் துறையில் நல்ல முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம். தேக ஆரோக்கியம் உண்டு. பெண்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சியும், கணவரின் ஆதரவும் உண்டு. மாணவர் கல்வியில் முன்னேற்றம் காணப்படும்.

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

# அயோத்தியில் இராமர் ஆலயம் உண்மையில் அமைந்திருந்ததா?

## அகழ்வாராய்ச்சிக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு

அயோத்தியில் பாபர் மசூதி கட்டப்பட்ட சர்ச்சைக்குரிய இடத்தில் இராமர் கோவில் இருந்ததா? என்பதை கண்டறிய அந்த இடத்தைத் தோண்டி ஆராய்ச்சி செய்யுமாறு லட்சுமணபுரி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



அயோத்தி, இராமர் ஜென்ம பூமி - பாபர்மசூதி சர்ச்சை தொடர்பான வழக்கு ஒன்று, அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் லட்சுமணபுரி கிளையில் நடைபெற்று வருகிறது. இதற்கிடையில் டெல்கியில் உள்ள கனடா நிறுவனமான 'இந்தியா விகாஸ் இண்டர்நேஷனல்' அயோத்தியில் அகழ்வாராய்ச்சி செய்து அறிக்கை தாக்கல் செய்தது. இந்த அறிக்கை மீது இரு தரப்பினரும் நீதிமன்றத்தில் கருத்துக்களைத் தெரிவித்தனர்

இதையடுத்து இவ்வழக்கு நேற்று முன்தினம் லட்சுமணபுரி உயர்நீதிமன்ற நீதிபதிகள் சுதீர் நாராயண், எஸ்.ஆர். ஆலம், பன்வார்சிங் ஆகியோர் முன் நிலையில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, பாபர் மசூதி கட்டப்பட்ட இடத்தில் கோவில் இருந்ததா? என்பதைக் கண்டறிய அந்த இடத்தைத் தோண்டி ஆராய்ச்சி செய்யுமாறு, இந்திய தொல்பொருள் ஆராய்ச்சித்துறைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த உத்தரவுப்படி, இன்னும் ஒரு வாரகாலத்தில், தோண்டும் பணி தொடங்கப்பட்டு அடுத்த ஒருவாரத்தில் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யப்படவேண்டும்.

ஆனால், இராமர் சிலை நிறுவப்பட்ட இடத்தில் தோண்டக்கூடாது என்றும், அங்கு நடைபெறும் பூஜைக்கு தடங்கல் ஏற்படுத்தக்கூடாது என்றும் நீதிமன்றம் நிபந்தனை விதித்துள்ளது.

இதேவேளை, நீதிமன்ற உத்தரவுக்கு பாரதீய ஜனதா மற்றும் இந்துத்துவ அமைப்புக்கள் வரவேற்புத் தெரிவித்துள்ளன.

விஸ்வ ஹிந்து பரிஷத் துணைத் தலைவர் கிரிராஜ் கிஷோர் கூறுகையில், நீதிமன்ற உத்தரவு வரவேற்கத்தக்கது தான். உண்மையைக் கண்டறிய இது உதவும் என்றார்.

ஆர்.எஸ்.எஸ். தரப்பில், இது மகிழ்ச்சியான விஷயம்தான். நீதிமன்ற உத்தரவை செயற்படுத்த சகல தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கூறப்பட்டது. பாரதீய ஜனதா செய்தித் தொடர்பாளர் நக்வி கூறுகையில், இது சாதகமான நிலைவரம். பேச்சுவார்த்தை அல்லது நீதிமன்றம் மூலம் சர்ச்சையைத் தீர்ப்பதையே எமது கட்சி விரும்புகிறது என்றார்.

நீதிமன்ற உத்தரவை எல்லோரும் மதிக்கவேண்டும் என்றார் காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர்.

**உலகவலம்**

### இஸ்ரேலின் தாக்குதலில் 11 பலஸ்தீனர் பலி; 40 பேர் படுகாயம்

காஸாப் பகுதியிலுள்ள பலஸ்தீன அகதிமுகாம் மீது, டாங்கிகள், ஹெலிகளின் உதவியுடன் இஸ்ரேலிய இராணுவம் நடாத்திய தாக்குதலில் 11 அப்பாவி பலஸ்தீனப் பொதுமக்கள் பலியானார்கள். 40 பேர் படுகாயமடைந்தனர்.

# தமிழக மீனவரின் பாரம்பரிய உரிமை மீறப்படுவது கவலை தருகின்றதாம்

## மன்னார் சம்பவம் குறித்து ஜெயலலிதா அறிக்கை

பேசாலை மற்றும் மன்னார் கடற் பரப்புக்களில் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா,

தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக அனுபவித்துவரும் உரிமைகளை மறுப்பது கவலை தருகின்றது எனவும் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர், வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இலங்கைக்கு கடத்திச் செல்லப்பட்ட தமிழக மீனவர்களின் எண்ணிக்கை அச்சுறுத்தக்கூடிய அளவுக்கு, 118 ஆக உள்ளது. இலங்கை மீனவர்களால் தாக்கப்பட்டதில் காயமடைந்த மீனவர்களில் 18 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாகத் தெரிகிறது. இவர்களில் ஒருவரது உடல் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கடத்தல் சம்பவங்கள் மிகவும் கண்டனத்துக்குரியது. இது குறித்த தகவல் கிடைத்ததும் மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை மீட்க நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசு, இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் மற்றும் இலங்கை அரசைக் கேட்டுக்கொண்டேன்.

தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக அனுபவித்துவரும் மீன்பிடி உரிமைகளை, இலங்கை அரசு அங்கீகரிக்க மறுப்பதும், சட்டத்தை இலங்கை மீனவர்கள் கையில் எடுக்க அனுமதிப்பதும் கவலை அளிக்கிறது. இலங்கைக் காவல்துறையால் பிடித்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும் அவர்களுடைய படகுகளையும் விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க பிரதமர் வாஜ்பாய்கது கடிதம் எழுதியுள்ளேன். இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை அங்கீகரிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள பிரதமரை நான் கேட்டுக்கொண்டுள்ளேன் எனக் கூறியுள்ளார்.


**விற்பனைக்கு**

றோணியோ மெசின் உடனடி விற்பனை. நேரில் வந்து விலைகோரவும். இவை தவிர, அலுவலக அலுமாரி, கோவை அலுமாரி, சிறிய அலுமாரி, உங்கள் அலுவலக உபகரணங்கள், பிறிண்டிங் மெசின் ஆகியன, நேரில் வரவும்.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்**

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(சி-655)

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்
யாழ்.மாவட்டம்

வெண்புறா WHITE PIGEON

**பதவி வெற்றிடங்கள்**

யாழ்.மாவட்டத்தில் யுனிசெப் அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் மேற்கொள்ளும் மிதிவெடி அபாய கல்வித்திட்டத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் கீழ்க் குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. வெளிக்கள இணைப்பாளர் Field Cordinater**

வெற்றிடம்: 01. மாதாந்த வேதனம் ரூபா 6,000.00
தகைமைகள்: G.C.E. A/L திறமைச் சித்தி.
கணினி அறிவும் ஆங்கிலத்தில் பேச எழுத சரளமான அறிவும்.
மோட்டார் சயிக்கிள் ஓட்டுநர் அனுமதிப் பத்திரம்.

**2. வெளிக்கள உத்தியோகத்தர் Field Officers**

வெற்றிடம்: 08. மாதாந்த வேதனம் ரூபா 5,000.00
தகைமைகள்: G.C.E. A/L சித்தி
மோட்டார் சயிக்கிள் ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் உள்ளோர்க்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களுடன் முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்ட சுயவிவரக் கோவையையும் 12.03.03 அன்றோ அதற்கு முன்போ கீழ்க் குறிப்பிட்டுள்ள முகவரியில் கிடைக்குமாறு அனுப்பிவைக்கவும்.

தலைவர்,
வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்,
13, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(சி-659)

**ராஜா** யாழ்ப்பாணம். 52 ஆவது தினம்

இன்றுமட்டும் விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த



**வசீகரா**

10.30, 2.30, 6.30 மட்டும்

(சி-628)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
ஷாம், மீராஜஸ்மீன் நடித்த

**பாலா**

வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி

**U 571**

அதிரடித் தாக்குதல் நிறைந்த படம்.

(சி-627)

# பாக்கு நீரிணையில் பாலம் வேண்டாம்; வைகோ-வாஜ்பாய்க்கு அவசர கடிதம்!

## இலங்கை அரசின் திட்டத்தை நிராகரிக்கவும் கோரிக்கை





இலங்கைக்கும் -இந்தியாவுக்கும் இடையே பாக்குநீரிணையைக் கடந்து பாலம் அமைக்கும் இலங்கை அரசாங்கத்தின் திட்டத்தை இந்திய அரசாங்கம் உடனடியாக நிராகரிக்க வேண்டுமென - மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் - இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயைக் கேட்டுள்ளது.

தலைமன்னாருக்கும் - இராமேஸ்வரத்துக்கும் இடையே பாலம் அமைப்பதான திட்டம் - நீண்டகாலமாக ஆராயப்பட்டு வரும் சேதுசமுத்திரத் திட்டத்தை முறியடிப்பதற்காக இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் சூழ்ச்சி எனவும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், வாஜ்பாயிடம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக ம.தி.மு.கவின் பொதுச் செயலாளர் வைகோ- பிரதமர் வாஜ்பாய்க்கு நீண்ட, விளக்கமான கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார்.

வேலூர்ச் சிறையில் இருந்தபடியே அவர் இக்கடிதத்தை எழுதியுள்ளார்.

அக்கடித்தில் - பாலம் அமைப்பதற்கான திட்டத்தில - பாக்குநீரிணையை ஆழப்படுத்துவதைத் தவிர்த்து, சிறிய வாய்க்கால் ஒன்றை அமைக்கலாம் என, இலங்கை அரசாங்கம் கூறியிருப்பது - ம.தி.மு.கவின் தேர்தல் வாக்குறுதியாகக் கூறப்பட்ட சேதுசமுத்திரத் திட்டத்தையே பலனிழக்கச் செய்து விடக்கூடியது. இத்தகைய சிறிய வாய்க்கால்களால், பெரிய சரக்குக் கப்பல்கள் எதுவுமே செல்லமுடியாது. இது கொழும்புக்கு இலாபமேயன்றி, தமிழக மக்களுக்கு நன்மைகள் எதனையும் தரப்போவதில்லை



என்றும் வைகோ குறிப்பிட்டார்.

இழுத்தடிப்புக்கு உள்ளாக்கப்பட்டுவரும் சேதுசமுத்திரத் திட்டத்தை, உடனடியாக நடைமுறைப்படுத்துமாறும் வைகோ தனது கடிதத்தில் கேட்டுள்ளார்.

### காவலரண்களுக்கு சட்டவிரோதமாக மின்விநியோகம

வவுனியா மாவட்டத்திலுள்ள பொலிஸார் - தமது காவலரண்களுக்குச் சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தைப் பாவித்து வருகின்றனர்.

சட்டத்தையும், ஒழுங்கையும் பேணவேண்டிய பொலிஸாரே, இவ்வாறு சட்டவிரோத மின்னிணைப்புப் பெற்றுள்ளமை பற்றி மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (03)

### 'விளக்கு' மீண்டும் வருகிறது!

ஆசிரியவாண்மை விருத்திக்காகப் பத்திரிகை ஒன்றினை மீண்டும் வெளியிடத் தமிழீழ கல்வி மேம்பாட்டுப்பேரவை தீர்மானித்துள்ளது.

'விளக்கு' எனும் பெயரில் முன்னர் வெளிவந்த இப்பத்திரிகை, இனி மேல் மாதத்திற்கு இரு தடவைகள் வெளியிடப்படவிருப்பதாக, பேரவையின் தலைவர் பேராசிரியர் சண்முகதாஸ் தெரிவித்துள்ளார்.

### தொண்டராசிரியருக்கு முக்கிய கலந்துரையாடல்

தொண்டர் ஆசிரியர்களுக்கான முக்கிய கலந்துரையாடலொன்று இன்று பி.ப. 1 மணிக்கு ஆரியகுளத்தடியிலுள்ள புதிய உயர்கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் அனைத்துத் தொண்டராசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி தொண்டராசிரியர் சங்கச்செயலாளர் அறிவித்துள்ளார்.

# புதைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் வட்டுக்கோட்டைப் பகுதியில் மீட்பு!

## இராணுவ நிலை அமைக்கப்பட்டிருந்த வீட்டிலிருந்து

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டைப் பகுதியில் நிலத்தின் கீழ் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் ஆகியவற்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

நேற்று முன்தினம், வட்டு.இந்துக் கல்லூரிக்கு அண்மையிலுள்ள வீடொன்றிலிருந்தே மேற்படி வெடி பொருட்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இராணுவத்தினரது உதவியுடன் இம்மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சில வெடிபொருட்கள் மீட்கமுடியாதநிலையில் காணப்பட்டதைத் தொடர்ந்து, அந்த இடத்தில்வைத்தே அவை வெடிக்கவைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்த அப்பகுதியில் பதற்றம் நிலவியது. மீட்கப்பட்ட ஆயுத விபரங்கள் மிக இரகசியமாகப் பேணப்பட்டதும், இப்பகுதியில் முன்னர் இராணுவ நிலையொன்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (78)

### நல்லூரில் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் சொற்பொழிவுத் தொடரில் - இன்று பி.ப. 5.30 மணிக்கு "இந்து சமயமும் இளைஞர்களும்" எனும் விடயம் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக மாணவன் தி.செல்வமனோகரன் சிறப்புச்சொற்பொழிவாற்றவுள்ளார்.

# இஸ்ரேலிடமிருந்து மீண்டும் கிபிர்; கொள்வனவுக்கு அங்கீகாரம்!



இலங்கை விமானப்படைக்கு, இஸ்ரேலிடமிருந்து கிபிர் விமானங்கள் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

கிபிர் சீ-2 ரகத்தைச் சேர்ந்த இந்த கிபிர் விமானங்கள், தற்போதும் விமானப்படைக்கு ஏற்ற விமானங்களே என்று விமானப்படையதிகாரிகள் சிபார்சு செய்துள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இடம்பெற்ற விடுதலைப்புலிகளின் தாக்குதலின்போது, கிபிர் விமானங்கள் சில அழிந்ததும், மேலும் சில விமானங்கள் பறப்பின்போதும் பயிற்சிகளின்போதும் வீழ்ந்து நொருங்கியதும் குறிப்பிடத்தக்கது.

# 'மாமனிதர்' குமார் பொன்னம்பலம் அஞ்சலி நிகழ்வு நெல்லியடியில்!

(யாழ்ப்பாணம்)

'மாமனிதர்' குமார் பொன்னம்பலத்தின் அஞ்சலிநிகழ்வு நாளை மறுதினம் நான்கு மணிக்கு நெல்லியடியில் நடைபெறவுள்ளது.

அஞ்சலிநிகழ்வுக்கு முன்பதாக- அன்னாரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி - பருத்தித்துறை நகரிலிருந்து புறப்பட்டு - மந்திகை, மாலுசந்தி, வதிரி ஊடாக நெல்லியடியை வந்தடையும்.

சட்டத்தரணி உருத்திரா தலைமையில் நடைபெறும் அஞ்சலி நிகழ்வில்- நாடாளுமன்ற உறுப்பினர்களான அ.விநாயகமூர்த்தி, யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளர் சிவலிங்கராஜா, சிவஞானமூர்த்தி, காங்கிரஸ் பிரமுகர்களான இ.ஆர். ஆனந்தராஜா, சீ.வி.கே.சிவஞானம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் சேதுராஜா, விக்கினேஸ்வராக் கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரம், உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அதிபர் கி.நடராசா உட்பட மற்றும் பல பிரமுகர்கள் உரையாற்றவுள்ளனர்.

அமரர் குமார் பொன்னம்பலம் கனடா, லண்டன் ஆகிய இடங்களில் தமிழ் மக்களுக்கு ஆற்றிய உரை அடங்கிய ஒளிப்பதிவு நாடாவும் அதேதினம் நெல்லியடி லஷ்மி திரையரங்கில் காண்பிக்கப்படும். (116)




தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கலை பண்பாட்டுக் கழகம் நடத்தும் 5 நாள் இசை, நடன, நாடகவிழா 20 ஆம், 21 ஆம், 22 ஆம், 23 ஆம், 24 ஆம் திகதிகளில் திருகோணமலை -உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் வெகு மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இது பற்றி விளக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று புதன்கிழமை மாலை திருகோணமலை - உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள வள்ளுவர் நிலையத்தில் நடைபெற்றது. கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை, விழா பொறுப்பாளர் சஞ்சய், விழாக்குழுத்தலைவர் சட்டத்தரணி கா.சிவபாலன் ஆகியோர் இதுபற்றிச் செய்தியாளர்களுக்கு விளக்கம் அளித்தனர்.

# புதிய பிரதேச செயலர் பிரிவாக காரைநகர் பிரகடனப்படுத்தப்பட்டது!

காரைநகர் மக்களின் கோரிக்கைக்கு இணங்க - காரைநகர் ஒரு தனிப்பிரதேச செயலர் பிரிவாக அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

அமைச்சர் மகேஸ்வரனின் வேண்டுகோளின் பேரில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய - உள்நாட்டு அலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால்- காரைநகர் ஓர் தனிப் பிரதேச செயலர் பிரிவாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய பிரதேச செயலர் அலுவலகத்தை உடனடியாக இயங்க வைக்குமாறு, யாழ்.அரசாங்க அதிபருக்கு வட-கிழக்கு மாகாண சபையின் தலைமைச் செயலாளரின் ஊடாக அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அமைச்சர் மகேஸ்வரன்- காரைநகரை நவீனமயத் திட்டத்தின் கீழ் கொண்டுவருவதற்குப் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் அடங்கிய 5 வருடத்திட்டமொன்றைத் தயாரித்து வருவதாகவும், இத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்குத் தனியான பிரதேச செயலர்பிரிவு அவசியமாக உள்ளதெனவும், இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மாணவருக்குப் பாடசாலை உபகரணங்கள்

(வவுனியா)

வவுனியா வடக்குப் பகுதி பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் ஆயிரம் மாணவர்களுக்கு மன்னார் "வாழ்வோதயம்" அமைப்பினர் பாடசாலை உபகரணங்களை அன்பளிப்புச்செய்துள்ளனர்.

வண பிதா ஜேசுராஜா அடிகளாரும் அவரது அலுவலக ஊழியர்களும் நேரடியாகச் சென்று உபகரணங்களைக் கையளித்துள்ளனர்.

புளியங்குளம், பழையவாடி, நெடுங்கேணி, மாறா இலுப்பை ஆகிய கிராமங்களிலுள்ள பாடசாலை மாணவர்களின் கல்வி நிலைமை மேம்படுத்துவதற்காகவே இக்கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (03)

# அமைய ஊழியர்களுக்கும் சேமலாபநிதி வழங்கப்படும்!

## 80,000 பேர் பயனடையும் வாய்ப்பு

(கொழும்பு)

பொதுச்சபைகளில் பணியாற்றும் அமைய ஊழியர்களுக்கும் - ஊழியர் சேமலாப நிதி வழங்கப்படவுள்ளது.

இதற்கான - பொதுச்சபை சேமலாப நிதியத்துக்கான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டதைத் தொடர்ந்தே - அமைய ஊழியர்களுக்கு இந்த வாய்ப்புக் கிடைக்கவுள்ளது.

இச்சட்ட மூலத்தைத் தாக்கல் செய்த நிதியமைச்சர் கே.என். சொக்ஸி- அமைய ஊழியர்களுக்கு- ஊழியர் சேமலாபநிதி வழங்கப்படவிருப்பது இதுவே முதற் தடவையெனத் தெரிவித்தார்.

இதன் மூலமாக 80,000 அமைய ஊழியர்கள் பயனடையவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பேராதனைப் பல்கலைக்கழகத்தில்

# பகிடிவதையினால் ஐவர் வைத்தியசாலையில்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில்- கலைப் பீடத்தைச் சேர்ந்த புதிய மாணவர்கள் மீது, சிரேஷ்ட மாணவர்கள் சிலர் பகிடிவதை புரிந்ததால், இரண்டு மாணவிகள் உட்பட 5 மாணவர்கள், பேராதனைப் பல்கலைக்கழக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாகப் பல்கலைக்கழக உபவேந்தர் - விசாரணைகள் நடத்தி பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ய அதிகாரிகளைப் பணித்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# மனித உரிமைகள் அலுவலக சேவை ஊழியர் பற்றாக்குறையால் பாதிப்பு!

## வழமையான செயற்பாடுகளும் ஸ்தம்பிதமாகும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் ஊழியர் பற்றாக்குறையாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலத்தில், மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திற்குப் பல மக்கள் முறைப்பாடுகள் செய்யும் பொருட்டும், மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான ஆலோசனைகளைப் பெறவும் வருகை தருமிடத்து - அங்கு ஊழியர்கள் பற்றாக்குறையாக இருப்பது பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

இது விடயமாகப் பலமுறை உரியவர்களுக்குத் தெரிவித்த போதிலும், இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும்,

இதனால் மனித உரிமை ஆணைக்குழுவை நாடிவரும் மக்களுக்கு முழுமையாகச் சேவை புரியமுடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுவதுடன்,

ஊழியர் பற்றாக்குறையால் - சில சமயங்களில் மக்களின் முறைப்பாடுகளுக்குத் தீர்வுகாண நீண்ட காலம் எடுப்பதாகவும், முறைப்பாடுகளின் நிமித்தம்- சம்பந்தப்பட்டவர்களை விசாரணை செய்யவோ, அவர்களைச் சந்திக்கவோ முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் மனித உரிமை அலுவலகம் திறக்கப்பட்டு நான்கு வருடங்கள் பூர்த்தியாகியிருந்தும், இதுவரை அங்கு இரு நிரந்தர ஊழியர்கள் மட்டுமே கடமை புரிவது குறிப்பிடத்தக்கது.

(க)

# பொதுமக்கள் பாவனைக்கு நாவற்குழி வீடமைப்புத் திட்டம்!

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் நடுத்தரக் குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்படவுள்ளன. மேற்படி நடவடிக்கையை யாழ். வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்டு வருகின்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் இவ்விடயம் குறித்து சுற்றுநிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வீடமைப்புத் திட்டத்தில் வீடுகளைப் பெற விரும்புபவர்கள், வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் தொடர்புகொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# புலோலி - கிராமக்கோடு வீதியைத் திறந்துவிட ஆவன செய்யவேண்டும்!

## பிரதேசவாதிகள் சிவாஜிலிங்கத்திடம் கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

புலோலி - பல்லப்பை இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ள புலோலி கிராமக்கோடு பல்லப்பை வீதியைத் திறந்து, மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்க அரசிடம் வற்புறுத்துமாறு புலோலி முன்னேற்றக்குழுவொன்று அண்மையில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தைச் சந்தித்துக் கோரிக்கை விடுத்துள்ளது.

இப்பாதை மூடப்பட்டிருப்பதால், அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து இறந்தவர்களின் பிரேதத்தை அடக்கம் செய்வதற்கு 2 மைல் சுற்றியே ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லவேண்டியுள்ளது.

அத்துடன், ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்குச் செல்லும் முக்கிய பாதையாகவும் இது விளங்குவதால், இது பொதுமக்கள் பாவனைக்குத் திறந்துவிடுவதற்கு ஆவன செய்துதரும்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதற்கு, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துகொண்டு ஆவன செய்து தருவதாக உறுதியளித்துள்ளார்.

(17)



மணலாறில் ஊடுருவியபோது விடுதலைப் புலிகளால் கைதாகி, தேசியத் தலைவரால் விடுவிக்கப்பட்ட இராணுவக் கோப்ரல் நிமால் குமார- தான் விடுதலையாகும் செய்தி பற்றி கிளிநொச்சியில் வைத்து, தொலைபேசியூடாகத் தனது உறவினருக்குத் தெரிவிக்கும் காட்சி இது.

# உலகவங்கி பிரதிநிதிகள் கல்வி அலுவலகம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வந்துள்ள உலக வங்கியின் பிரதிநிதிகள், நேற்று முன்தினம் யாழ்.கல்விப்பணிமனைக்கு விஜயம்செய்தனர். இக் குழுவினர், அங்கு கல்வி அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேச மாணவர்களின் கல்வி தொடர்பான பிரச்சினைகள் மற்றும் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள பாடசாலைகளின் நிலவரங்கள், தொண்டராசிரியர் நியமனம் போன்ற விடயங்கள் இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டன.

## முக்கிய ஆவணங்கள் தொலைந்தாலும்

# முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளாத நெடுந்தீவுப் பொலிஸ் நிலையம்!

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேசத்திற்கு எனத் தனியாகப் பொலிஸ் நிலையம் திறக்கப்பட்டுள்ளபோதும் - அங்கு அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் தொலைந்தமைக்கான முறைப்பாடுகளோ, இழப்பீடு தொடர்பான பதிவுகளோ மேற்கொள்ளப்படுவதில்லை.

மேற்படி விடயங்கள் தொடர்பான பதிவுகளை மேற்கொள்வதற்காக, நெடுந்தீவுப் பொலிஸ் நிலையத்திற்குச் செல்லும் பொதுமக்களை - ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்திற்குச் செல்லுமாறு கூறிப் பொலிஸார் திருப்பி அனுப்புகின்றனர்.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதநிலையில் செயற்பட்டுவரும் பொலிஸ் நிலையம் தொடர்பாக மக்கள் மத்தியிலிருந்து அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

(113)

# தேசிய எழுச்சிப் பேரவை பேராளர் மாநாடு யாழிலும்!

(யாழ்ப்பாணம்)

தேசிய எழுச்சிப் பேரவை - யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு வருகின்றது.

இம்மாத இறுதியில் தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் மாநாடு யாழ்ப்பாணத்தில் மிகப் பிரமாண்டமாக இடம்பெறவுள்ளது.

# 2 ஆவது உலக இந்து மாநாடு; மாணவரிடையே போட்டிகள்!

இரண்டாம் உலக இந்து மாநாடு தொடர்பாக இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்படும் பண்ணிசை, கட்டுரை, பேச்சுப்போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர், தங்கள் விண்ணப்பங்களை, பாடசாலைகளின் அதிபருக்கூடாக எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னராக உதவிப்பணிப்பாளர், இந்துசமய விவகார அலுவலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. கட்டுரைப்போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும். போட்டி நடைபெறும் இடம், பின்னர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 2 மணிக்குப் பாடசாலை அதிபர் பொநடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

## சின்னஞ் சிறு செய்திகள்

### தமிழீழ நீதிமன்ற வளாகம் திறப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள தமிழீழ நீதிமன்ற வளாகம் எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இத்திறப்புவிழா வைபவத்தில் பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரியவருகின்றது.

### மகளிர்தின கட்டுரைப்போட்டி முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் - இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இடம்பெயர்ந்தோர் விசேட செயற்பாட்டு மையமும் இணைந்து நடாத்திய கட்டுரைப் போட்டியின் முடிவுகள் நேற்று வெளியாகின.

இதில் வெற்றியீட்டியோரின் விபரங்கள் வருமாறு -

ஆரம்பப்பிரிவு: 1 ஆம் இடம்- த.நிதர்சன் (கிருஷ்ணன் கோயிலடி முகாம்), 2 ஆம் இடம் - பா.நிந்தா (இலுப்பையடி முகாம்), 3 ஆம் இடம்- த.தேனுக்கா (கிருஷ்ணன் கோயிலடி முகாம்), மத்திய பிரிவு: 1 ஆம் இடம் - பூ.திருவருட்செல்வி (இலுப்பையடி முகாம்), 2 ஆம் இடம்-ந.சஞ்சிகா (குருவளை முகாம்), 3 ஆம் இடம் - பே.வித்தியா (கிருஷ்ணன் கோயிலடி முகாம்).

மேற்பிரிவு: 1 ஆம் இடம் - செ. விஜித்திரா (இந்துக் கல்லூரி முகாம்), 2 ஆம் இடம் - பூ.திருவருட்செல்வன் (இலுப்பையடி முகாம்), 3 ஆம் இடம் - பே.சாதனாபேபி (கிருஷ்ணன் கோயிலடி முகாம்).

இவர்களுக்கான பரிசில்கள் நாளை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள மகளிர் தின விழாவில் வைத்து வழங்கப்படும்.

### கட்டைக்காட்டில் தாய், சேய் நலக் கிளினிக்

கட்டைக்காட்டுச் சந்தியிலுள்ள கிராம அலுவலர் அலுவலகத்தில் மாதத்தின் 4 ஆவது திங்கட்கிழமைகளில் தாய், சேய்நலக் கிளினிக் இயங்குமென சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.ஞானசுதன் தெரிவித்துள்ளார்.

இதுவரை அம்மைநோய், போலியோ, ஏற்புவலி ஆகியவற்றுக்கான தடுப்பு மருந்துகளைப் போட்டுக் கொள்ளாதவர்கள் அனைவரையும் மேற்படி கிளினிக்கில் வந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

### தென்னிலங்கை வியாபரிகளால் மரக்கறிக்கு மவுசு

(சரசாலை)

சாவகச்சேரிச் சந்தையிலுள்ள மரக்கறிகளைத் தென்னிலங்கையில் இருந்து வருகின்ற வியாபாரிகள் கொள்வனவு செய்வதால், மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளது. வெங்காயம், கோவா, தக்காளிப்பழம், பச்சைமிளகாய் போன்றவற்றையே தென்னிலங்கை வியாபாரிகள் பெருமளவாகக் கொள்வனவு செய்து வாகனங்களில் ஏற்றிச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (34)

### கனடாவின் வெளியுறவு மந்திரி கொழும்பு வருகிறார்

(கொழும்பு)

கனடாவின் வெளியுறவு அமைச்சர் பில் கிரஹாம் அடுத்த வாரம் கொழும்பு வரவிருக்கிறார். எதிர்வரும் செவ்வாயன்று வரும் இவர், தற்போதைய அமைதி முயற்சிகள் தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

இரண்டாவது அகவையில்

பெயர் :ச.சசீராஜ்
முகவரி: சுதுமலை தெற்கு, சாவற்கட்டு.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------
பெற்றார் ஒப்பம்

சிந்தித்திட...

# பாதுகாப்பு வலயத்துள் நாம் இயங்கினால்தான்

**மத்தியதரக் குடும்பத்தில் பிறந்த நான், தந்தையின் வழிநடத்தலின்படி ஒரு வைத்தியராக வரமுடிந்தது. என்னிடம் இயல்பாக இருந்த மனத்துணிவுடன் கூடிய அர்ப்பணிப்பு வாழ்க்கையுமே எனது உயர்வுக்கு உறுதுணையாக இருந்தது என்கிறார் தெல்லிப்பளை வைத்தியசாலை சுகாதார வைத்திய அதிகாரியும், யாழ்.போதனா வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளருமான செல்வி.நவமலர் கனகரட்ணம்.**

கேள்வி:-நீங்கள் வைத்தியத்துறையைத் தெரிவுசெய்து கற்று, அதனூடாக உயர்நிலை அடைந்தமைக்குரிய பின்னணிகள் எவ்வாறிருந்தன?

பதில்:- நான் ஒரு மத்தியதரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். என்னுடைய தகப்பனார் பொலிஸ் திணைக்களத்தில் எழுதுநராகப் பணிபுரிந்து வந்தார். நாங்கள் இரண்டு பெண் பிள்ளைகள். அதில், என்னுடைய அக்காவை ஒரு வைத்தியராக்க வேண்டும் என்று தகப்பனார் படிப்பித்துக்கொண்டு வந்தபோது, அக்கா எஸ்.எஸ்.சியுடன் கல்வியை நிறுத்திவிட்டார். தொடர்ந்து அப்பாவின் வழிகாட்டலுடன், நான் படித்து ஒரு வைத்தியராகவந்தேன்.

எனக்கு முதல் நியமனம் மாத்தறைக்குத் தந்தார்கள். நான் அங்கு கடமையைப் பொறுப்பேற்கச் சென்றபோது, எனது நண்பிக்கு அநூராதபுரத்திற்கு நியமனம் கிடைத்தது தெரிந்தது. பின்னர் நண்பியின் வேண்டுதலுக்கு இணங்க, நான் அநூராபுரத்திற்கும்- நண்பி மாத்தறைக்குமாக நியமனங்களை மாற்றம் செய்தோம்.

அங்கு எனக்கு சிறுபிள்ளைகளின் வார்ட்டில்தான் வேலை கிடைத்தது. அந்த அனுபவம்தான் என்னை மாவட்ட வைத்திய அதிகாரியாக்கியது.

தொடர்ந்து, வவுனியாவில் மாவட்ட வைத்திய அதிகாரியாக நியமனம் கிடைத்தது. அங்கு ஒரு ஆண்தான் மாவட்ட வைத்திய அதிகாரியாக இருந்தார். அவர் வேலையில் இல்லாத நேரங்களில், பிரேத பரிசோதனைகளை நானே செய்ய வேண்டி ஏற்பட்டது. அப்படிப் பிரேத பரிசோதனைக்கு என்னை அனுப்பும்போது, முதலில் சொல்லுவார் - நீங்கள் பரிசோதனையைச் செய்யுங்கள், நான் சொல்கிறேன் என்று. பின்னர், கூறுவார் - நீங்கள் செய்ததை எழுதுங்கள் என்று. இப்படியாகச் சொல்லித்தான் எனக்குப் பயிற்சிதந்தார். அதற்குப் பின்னரே எனக்கு மாவட்ட வைத்திய அதிகாரியாகப் பதவியுயர்வு கிடைத்தது.

பின்னர் - மல்லாவி, முல்லைத்தீவு போன்ற இடங்களில் பணியாற்றித் தொடர்ந்து, தொம்பே என்னும் சிங்கள இடத்திற்கு மாவட்ட வைத்திய அதிகாரியாக இடமாற்றம் கிடைத்தது. மிகவும் பின்தங்கியதும், பயங்கரமானதுமான அந்த இடத்தில் வேலைசெய்யும்போது, நிறையப் பிரச்சினைகளைச் சந்தித்தேன். அங்கு ஏற்பட்ட ஒரு பிரச்சினை காரணமாக வைத்தியசாலையைச் சீல்வைத்துப் பூட்டிவிட்டு, பொலிஸ்நிலையத்தில் திறப்பையும் ஒப்படைத்துவிட்டு, மன்னாருக்கு மாற்றலாகினேன். இதன்பின்னரே - தெல்லிப்பளை, யாழ்ப்பாணம் ஆகிய வைத்தியசாலைகளுக்குப் பணிபுரியவந்தேன்.

முதலில், யாழ்.போதனா வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரியாகப் பணிபுரிந்தேன். மிகவும் பிரச்சினையான காலப்பகுதியில் இங்கு நான் கடமையில் இருந்தபோது- பலரது பயமுறுத்தல்களுக்கும், பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியநிலையில் இருந்தேன். உயிருக்குக்கூட அச்சுறுத்தல் ஏற்பட்டபோதும்கூட, மனந்தளராமல் கடமையாற்றினேன்.

## மக்களும் அங்கு வரும் சூழ்நிலை ஏற்படும்!

தற்போது உயர்பாதுகாப்பு வலயத்தினுள் இயங்கும் தெல்லிப்பளைப் பிரிவிலுள்ள வைத்தியப் பணிமனையில் பணியாற்றுகிறேன். இங்கு நிறைய அழுத்தங்கள் எமக்கு ஏற்படுகின்றபோதும், உயர்பாதுகாப்பு வலயத்தினுள் நாங்கள் தொடர்ந்து இயங்கினால்தான், மக்களும் அங்கு வரமுடியும் என்பதற்காகத் தொடர்ந்தும் அங்கு சென்றுவருகிறேன்.

கேள்வி:- பெண்களைப் பொறுத்தளவில் அவர்களுடைய நிர்வாகத்திறன் பற்றிய உங்கள் கருத்து என்ன?

பதில்:-பெண்களைப் பொறுத்தளவில் நிர்வாகத்தில் பொறுப்புள்ள பதவிகளில் இருக்கின்றபோது, நாங்கள் சரியாக நடந்துகொள்ளவேண்டும். அப்படி நடந்துகொள்ளும்போது, எங்களை எதிர்த்தவர்கள்கூட, நாங்கள் செய்தது பிழை என்று உணர்ந்து எங்களிடம் வருவார்கள்.

பொறுப்புள்ள பதவியில் இருக்கின்றபோது நிதானமாக நடந்துகொள்வதுடன், மற்ற ஊழியர்களுடனும் ஒருவருக்கொருவர் ஏற்றத்தாழ்வு காட்டாமல், நிர்வாகத்தை நடாத்தினால் எந்தவொரு பிரச்சினையும் ஏற்படாது என்பதை மனதிற்கொள்ளவேண்டும்.

கேள்வி:-யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தளவில் தற்போதுள்ள வைத்திய வசதிகள் பற்றி...?



நவமலர் கனகரட்ணம்

பதில்:-இங்குள்ள வைத்தியவசதிகள் குறைவாகவே இருக்கின்றன. போகிறபோக்கைப் பார்த்தால் இருக்கும் வைத்திய வசதிகள்கூடப் பாதிக்கப்படும் போலத்தான் தெரிகிறது.

தற்போது வைத்தியத்துறையில் இருக்கும் நாம்கூட சரியாக வேலை செய்வதில்லை. வேலை செய்யவேண்டிய நேரங்களில், ஐம்பது சதவீதமானோர், தமக்கான பணிகளைச் சரியான முறையில் செய்வதில்லை.

வாகன வசதிகள்கூட இங்கு மிகக்குறைவு. மன்னார் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு 4 வாகனங்கள் இருக்கின்றன. ஆனால், இங்கு ஒரு வாகனத்தை வைத்துக் கொண்டு 3, 4 சுகாதார வைத்திய அதிகாரிகள் வாகனத்துக்குக் காவல் நிற்கவேண்டியுள்ளது.

கேள்வி:- சட்ட வைத்தியத்துறையின் தற்போதையநிலை எப்படி இருக்கிறது?

பதில்:-சட்டவைத்தியத்துறையின் முக்கியமான பகுதியான பிரேத பரிசோதனை செய்வதற்கு, ஆண் சட்டவைத்திய அதிகாரிகள்கூடப் பின்நிற்கிறார்கள். உள்ளகப் பயிற்சிக்காக வரும் மருத்துவபீட மாணவர்களுக்குக்கூட இந்தச் செய்முறையைக் காட்டிப் படிப்பிப்பதற்கு இங்கு வைத்தியர்கள் இல்லை.

ஒவ்வொருமுறையும் பயிற்சிபெறும் மருத்துவ மாணவர்களுக்குப் பரீட்சை வைக்கும்போது, நான் அடிக்கடி கூறுவது- 'நீங்கள் எழுத்துப்பரீட்சை மட்டும் உஷாராகச் செய்தால் போதாது, பிரேத பரிசோதனையையும் செய்யுங்கள்' என்று. அதுதான் சட்டவைத்திய அதிகாரியாவதற்குக் கட்டாயம் தேவை.

பிரேத பரிசோதனையின்போது நிறையவே சட்டரீதியான தவறுகள் விடப்படுகின்றன. அதற்கு ஒரு காரணம் பிரேத பரிசோதனைகளை மேற்கொள்பவர்கள் அதுபற்றிப் படிப்பதில்லை என்றுதான் கூறவேண்டும்.

சட்ட வைத்தியத்துறையைப் பொறுத்தளவில் நீதிமன்றத்துக்குச் செல்லவேண்டும் என்ற பாரம்பரியமான பயமும் இருககிறதால், பின்னடிப்பு இன்னமும் வலுவாகிறது.

சட்ட வைத்தியத்துறை இன்னமும் முன்னேற வேண்டிய நிலையே எம்பிரதேசத்தில் இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

(நேர்காணல்:- கலானந்தி, உஷானந்தி)

# தலைவி நீ, தலை நிமிர்!



பெண்ணே, நீ ஏன் உன்னைக் குறைத்து மதிப்பிடுகின்றாய்? நீ, வீட்டினுள்ளேயிருந்து சமைப்பதும், துணி துவைப்பதும்- வீட்டையும், சுற்றாடலையும் அழகுபடுத்துவதும், குழந்தைகளை வளர்ப்பதுமென்றும் உன் திறமை ஒரு குறுகிய வட்டத்துள் ஒடுக்கப்பட்டு, ஓர் இயந்திரமாகிவிட்டாய். அல்லது அடிமைப்படுத்தப் பட்டுவிட்டாயென்று கருதுகிறாயா?

அதுதான் நீ செய்யும் மாபெரும் தவறு. உன்னிடம் மிகச் சிறந்த திறமை இருக்கிறது. "இருந்தென்ன பயன்? அதை அசுரக்கரங்கள் பல சேர்ந்து அழுத்தி, நசுக்கி உருக்காட்ட விடாது செய்கின்றனவே" என்கிறாயா?

அவறறையெல்லாம் விட்டுத்தள்ளு. உனக்கு உன்மேல நம்பிக்கை இருக்கிறதா? உன்னிடம் திறமையிருக்கிறதென்பதை நீ உணருகிறாயா? உன் திறமையை நசுக்கமுயலும் கரங்களையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு, உன் திறமையால் விஸ்வரூபங்கொள்ள முடியுமென்பதை நீ மனப்பூர்வமாக உணர்ந்து, நம்பினால்போதும்.

மண்ணின் கீழேபோட்டு மூடப்பட்ட சின்னஞ்சிறு வித்து- மெல்லச் சிறுதுளிர்களைக் காட்டி, நிமர்ந்து பெரியதோர் ஆலமராய் கிளைபரப்பி நிற்பதை நீ கண்டதில்லையா? நீயும் அப்படி நிமிரமுடியுமென நம்பு.

நீ எந்த இடத்தில் பணியாற்றுகின்றாயோ- அது வீடானாலும் சரி, அலுவலகமானாலும் சரி - அதை உன் சாம்ராஜ ஜியமாக்கிக்கொண்டு, அதன் மகாராணியாகிவிடு.

ஆம், ஒன்றை நினைவு வைத்துக்கொள். நீ அங்கு மகாராணியேயன்றி, அடிமையல்ல. முக்கியமாக இந்த வீட்டுச் சாம்ராஜ்ஜியத்திலே ஆட்சிசெலுத்தும் பெண்ணின் திறமையும், முக்கியத்துவமும் மற்றவர்களுக்குப் புரிவதில்லை.

கற்பனையிலே உருவாகிய கதைகளிலும், நாடகங்களிலும், சினிமாவிலும் அவள் முக்கிய பாத்திரமாகச் சித்திரிக்கப்பட்டாலும், உண்மையான வாழ்வில் அவள் முக்கியத்துவம் பெறுவது அரிது. எனவே நீதான் உன் திறமையையும், முக்கியத்துவத்தையும் புரிந்துகொண்டு அதை நிலைநாட்டவேண்டும்.

முதலாவதாக நீ ஆட்சிபுரியும் இடத்தில் எந்தத் திட்டமோ, நோக்கமோ இன்றி- ஏதோ அன்றாடம் செய்யவேண்டியதைச் செய்து தொலைப்பதென்ற ரீதியில் நீ இயங்கக் கூடாது. பொதுவாக வீட்டில் நீ வேலைசெய்யும்போது, "வீட்டுவேலைதானே, எப்படிச் செய்யவேண்டுமென்று திட்டம் போடவேண்டியதில்லையே. அன்றாடம் செய்ய வேண்டியவற்றைச் செய்வதுதானே" என்ற ஓர் அலட்சியம் உனக்குள்ளேயே இருக்கிறதல்லவா? அலுவலகத்தில் பணிபுரியும்போது "சம்பளம் எப்படியோ கிடைக்கும். அன்றாடம் கொடுக்கப்பட்ட வேலைகளைக் கூறியபடி செய்துவிட்டுப் போனால் கடமை முடிந்தது" என்ற மனப்பான்மைதான் உனக்கு இருக்கிறது. இந்த மனப்பான்மையை மூலவேருடன் பிடுங்கியெறி.

நீ ஒரு தலைவி. அதை மனதில் நன்றாகப் பதித்துக்கொள். அந்த நினைவுடன் செயலாற்றத் தொடங்கு. உன் நிர்வாகத்திற்கு உட்பட்டது வீடென்றாலென்ன, அலுவலகத்தின் ஒரு சிறுபகுதியென்றாலென்ன- அதைத் திறம்பட நிர்வகிக்க நீ ஆரம்பி, நீ தலைவியாகக் கருதப்படுவாய்.

எதற்கும் ஓர் இலக்கை ஏற்படுத்திக்கொள். அதை எப்படி அடைவதென்று திட்டமிட்டுச் செயற்படு. உன்னைச் சூழ உள்ளவர்களையும் அந்த இலக்கையடைய ஏற்றவர்களாக்கு அவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளி. அந்த இலக்கை நோக்கி வழிநடதது.

உதாரணமாக, நீ நிர்வகிப்பது ஒரு வீடாயிருந்தால் உன் கணவன்- தன் பணியகத்தில் முன்னேறவேண்டும், பிள்ளைகள் சிறந்த அறிவாளிகளாகவேண்டும். வீட்டின் வருமானம் இவ்வளவாக அமையவேண்டும் என்பன போன்ற இலக்குகளை ஏற்படுத்தி, அவற்றைநோக்கி முன்னேறலாம்.

அடுத்து அப்படி முன்னேற என்ன செய்யவேண்டுமென்று சிந்திப்போம்.

**- யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

# கவிதைச் சோலை

## உறவு வாசம்



அல்பத்தில் சிரிக்கும்
உறவு முகங்கள்
ஆபத்தில் உதவிகேட்க
அவசரமாய் இறுகும்

மருந்து தடவி
ஆறாத காயம்
தந்தையின்
கண்ணீர் துளிபட
காணாமல் போகும்

ஆலய சிலை முகத்தில்
அகப்படாத கருணை
அடுப்படியில் வேகும்
அன்னையின் கண்களில்

பள்ளி ஆசிரியர்
பயிற்றுவிக்காதது
அனுபவ ஆசானால்
ஆழமாய் பதியும்

எதுவும் தராத
பிரமிப்பை வழங்கும்
பால்நிலா பிடிக்க
பனித்துளி விரித்த
பசிய புல்வெளி.

*மு. சாந்தகுமாரி*

## பால் சோறு



உறங்கும்போதும்
விழித்துக் கொள்கின்றன
உன்னைப்பற்றிய நினைவுகள்

இயலாமையில்
எழுதிக் கொண்டிருக்கிறேன்
இரங்கற்பாக்களை

என் தாலாட்டு
மௌனத்தில் கரைய
அடக்கப்பட்டுவிட்டது
உனது அழுகுரல்

சமாதானங்கள்
செலவில்லாதபடிக்கு
சிதைக்கப்பட்டுவிட்டன
உனது சிணுங்கல்கள்

மார்பு கனத்துக் கிடக்கையில்
பசுக்கள் வீடு திரும்புகின்றன
கன்றுகளுடன்

நிலவு காயும் முற்றத்தில்
நித்தமும் நிற்கிறேன்
பால் சோற்றை
கைகளில் ஏந்தியபடி.

- தென்றல்

## பூக்களுக்கு

கொஞ்சம் முட்களை தூவி
என் பாதங்களை நோகடி
காம்பிற்குள் வாசனையை
அடைத்துவை
வேறொரு வண்ணத்துப் பூச்சிக்கு
காத்திருப்பதாய் பாவனை செய்
இல்லை இலைகளுக்கு கீழேனும்
சற்று ஒளிந்துகொள்
மனசு வலிக்க வலிக்க
நேசம் கொள்ள மட்டுமே தெரிந்து
விலகிப் போகத் தெரியாத
என் வேண்டுகோளை
பூக்களுக்கு வைக்கிறேன்
உனக்கும் எடுத்துக் கொள்.

*- கீர்த்தி*

# பெண்ணாகி வந்த பூங்காற்று

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

இவ்வாறு தொடரும் பெண் ஆளுமை உருவாக்கம் என்ற நச்சு வட்டம் எங்கோ ஓர் இடத்தில் உடைக்கப்பட்டு, வளர்ச்சிப்பாதை நோக்கிய வட்டமாக மாற்றப்படவேண்டும். அப்போது முழுச்சமுதாயமும் நன்மை பெறும.

நூல்கள், சஞ்சிகைகள், தொடர்பு சாதனங்கள், கலை இலக்கியங்கள் யாவும் ஆண்களை வீரர்கள், கண்டுபிடிப்பாளர்கள் என்றும- பெண்களை மெல்லியலாளர்கள், பணிந்து போகக்கூடியவர்கள், தங்கிவாழ்பவர்கள் என்றும் காலங்காலமாகக் காட்டிவருகின்றபோதும், இந்த வேறுபாடு உண்மையானதில்லை என்பதை இன்றும் வாழ்ந்து வரும் சில நாடோடிச் சமூகங்கள் அல்லது ஆதி இனக்குழுக்கள் நிரூபித்துள்ளன.



**பழங்குடி மக்கள் வாழ்வின் ஆதாரம்**

அராபி (ARAPESH) பழங்குடி மக்களில் ஆண்கள்- பெண்கள் ஆகிய இருபாலரும் மென்மையானவர்களாகவும், மற்ற மனிதர்கள்மது அதிக அன்புகொண்டு, அவர்களைக் கவனிப்பவர்களாகவும் உள்ளனர். குழந்தை வளர்ப்பிலும் ஆண்களும், பெண்களும் சம அளவு பங்களிப்புச் செய்கிறார்கள்.

இதற்கு முற்றிலும் எதிர்மாறாக முணடுகுமோர் (Mundugumor) பழங்குடி இனத்தவரிடையே ஆண்களும், பெண்களும் வன்முறையாளர்களாகவும், கடும் போட்டிகளில் ஈடுபடுபவர்களாகவும் காணப்படுகின்றனர்.

சம்புலி (Tchambuli) என்னும் இனத்தவரை நோக்கினால்- அங்கு பெண்கள் உறுதியானவர்களாகவும், தலைமை தாங்குபவர்களாகவும் இருந்து குடும்பங்களை நடத்த- ஆண்கள் பெண்களில் தங்கிவாழ்பவராக உள்ளனர். அதே சமயம், ஆண்களே அதிகளவு சித்திரம், நடனம் போன்ற கலைகளில் ஈடுபடுபவர்களாயும், பிள்ளைகளைக் கவனிப்பவர்களாயும் உள்ளனர்.

உலகம் முழுவதிலுமே ஆதிகாலத்தில் பெண்கள் தலைமைதாங்கி வாழ்ந்த, தாய்வழிச் சமூகவமைப்புக்கள் இருந்தமை ஐயத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

மேலே சுட்டப்பட்ட உதாரணங்களில் இருந்து ஒருவிடயம் தெளிவாகத் தெரிகின்றது. பால் சார்ந்த இயல்புகளும், நடத்தைகளும்- பிறப்பினால் தீர்மானிக்கப்படுவதில்லை. அதாவது பெண்ணியல்புகள்- பெண்ணாகப் பிறந்ததனால் ஏற்பட்ட இயல்புகள அல்ல. அவை, குழந்தைகள் வளர்த்தெடுக்கப்படுகின்ற சமூகமுறைமைகளிலும், கலாசார நிலைகளிலுமே தங்கியுள்ளன.

**உளவியலாளர் கருத்து**

உளப்பகுப்பாய்வுக் கொள்கை மூலம் உலகப்பிரசித்தி பெற்றவர் சிக்மண்ட் புரோயிட் என்ற உளவியல் அறிஞர். அவர் உளவியல் ரீதியில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இருககக்கூடிய சில வேறுபாடுகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஈடிபஸ் சிக்கல் (Oedipus complex), இலக்ரிக் சிக்கல் (Electric complex) ஆகிய சொற்கள் உளவியல் உலகில் அடிக்கடி பாவிக்கப்படுவதுண்டு. ஆண்பிள்ளைகள் தாயுடன் அதிகளவு அன்பாக இருத்தலையும், பெண்பிள்ளைகள் தந்தையுடன் கூடிய பாசமாக இருத்தலையும் பால் வேறுபாட்டுடன் தொடர்புடைய உளவியல் மூலம் விளக்கமுனைந்தார் புரோயிட். ஆயினும், பின்வந்த உளவியல் நிபுணர்கள் பலர், எல்லா விடயங்களையும் புரோயிட், பாலியலோடு இணைத்துப் பார்த்ததை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் வேறுவேறு நடத்தைக் கோலங்களைக்கொண்டு வளருவதற்கு- சமூகம் கையாளும் பாராட்டுதல்களும், தண்டனைகளுமே அடிப்படைக் காரணங்களாய் அமைகின்றன என்பதைச் சமூககற்றல் கொள்கையாளர்கள் வலியுறுத்தினா.

உதாரணமாக, ஆண்பிள்ளை ஒருவருக்குக் கோபம் வரும்போது, "அவன் ஆம்பிளை, கோபம் வருந்தானே"என்று அது நியாயப்படுத்தப்பட்டுப் பாராட்டப்படுதலையும், பெண்பிள்ளை ஒருவருக்குக் கோபம்வரும்போது "பொம்பிளைப் பிள்ளைக்கு உப்பிடிக் கோபம் வரப்படாது" என்று அந்த உணர்வு ஏற்றுக்கொள்ளப்படாது இழித்துரைக்கப்படுவதையும் அவர்கள் சுட்டிக் காட்டினர்.

**பெண்கள் பற்றிய சில ஆய்வுமுடிவுகள்**

உலகம் முழுவதையும் எடுத்து நோக்குகின்றபோது, பொதுவாகப் பெண்கள்- ஆண்களைவிட அதிககாலம் உயிர் வாழ்பவர்களாக இருந்தாலும், மருத்துவசேவையை அதிகம் நாடுபவர்கள் பெண்களாகவே உள்ளனர். உளநலக்குறைபாடுகள் ஆண்களைவிடப் பெண்களில் ஏறத்தாள இருமடங்கு அதிகமாக ஏற்படுகின்றது. அதிலும் குறிப்பாக மனச்சோர்வு (depression), அச்சநோய் (phobia), பீதிநோய் (panic disorder), மெய்ப்பாட்டு நோய்கள் (somatization disorder), கண்டித நோய் (Obscssibe Compulsive Disorder) ஆகிய உளப்பிரச்சினைகள் ஆண்களைவிடப் பெண்களையே அதிகம் தாக்குபவையாகவுள்ளன. ஆயினும், சமூகவிரோதச் செயற்பாடுகளும், மதுப்பாவனையும், போதைப் பொருட்பாவனையும் பெண்களிடம் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளன. அறிகைத் தொழிற்பாடுகள் பாதிக்கப்படுவதால் ஏற்படும் உளப்பிரச்சினைகள் இருபாலரிலும் சமவளவாகவே தோன்றுகின்றன.

திருமணம் ஆகாத பெண்களும், கணவனைப் பிரிந்துவாழும் பெண்களும், விவாகரத்துப் பெற்ற பெண்களும், கணவனை இழந்த பெண்களும் - குடும்பத்தில் வாழும் பெண்களைவிட அதிகளவு உளப்பிரச்சினைகளுக்கு ஆளாகிறார்கள் என்ற ஆய்வு முடிவு, திருமணம் செய்து குடும்பத்தோடு வாழ்வது எப்போதும் ஆரோக்கியமானது என்ற செய்தியை மிகவலிமையுடன் தருகிறது. ஆயினும், திருமணமான ஆண்கள்- திருமணமான பெண்கள் என்ற இரு சாராரையும் ஒப்பிடும்போது, பெண்களே அதிக உளத்தாக்கங்களுக்கு உள்ளாகிறார்கள் என்று தெரிகிறது. ஆகவே திருமணம் என்ற பந்தம் ஆண்களைவிடப் பெண்களை அதிகம் அழுத்துகிற விடயமாக இருப்பினும்கூட, திருமணம் செய்யாதிருப்பதைவிட அல்லது கணவனைப் பிரிந்து வாழ்வதைவிடச் சேர்ந்துவாழ்வது சிறந்தது என்ற கருத்தைப் பெண்கள் மனதில் கொள்வது மிக முக்கியமானது.

*தொடரும்...*

கோகிலா மகேந்திரன்

## ஸ்ரொக்கிங் நெற்றின் மூலம் பூச்செய்யும் முறை

## MORNING FLOWER

### தேவையான பொருட்கள்



ஸ்ரொக்கிங் நெற் - ஊதா, பச்சை
Gold colour கம்பி - 10
பச்சைக் கம்பி - 5
பஞ்சு தேவையான அளவு
மகரந்தம் (Light colour ஊதா)
கட்டுக்கம்பி
Flower tape

### செய்முறை

Morning flower செய்வதாயின் 8 அங்குலம் கொண்ட 5 Gold கம்பிகளை வெட்டி எடுக்கவும். பின் இரு அந்தங்களையும் சேர்த்து முறுக்கவும். பின் இதய வடிவில் (heart) வளைக்கவும். அக்கம்பிகளை ஸ்ரொக்கிங் நெற்றினால் இறுகக் கட்டவும். அதன்பின் கட்டுக்கம்பியின் நுனியில் வளைத்து அதில் பஞ்சினை வைத்து, ஸ்ரொக்கிங் நெற்றில் கட்டவும். அதனைச் சுற்றி 8 சோடி மகரந்தத்தை வைத்து கட்டியபின், இதழ்களைச் சுற்றி ஒன்றன் பின் ஒன்றாக வைத்து பூ வடிவில் கட்டவும். கட்டியபின் இதழ்களை வெளிப்புறமாக வளைக்கவும். அதே போலவே, 5 அங்குலக்கம்பி ஐந்தை வளைத்து ஸ்ரொக்கிங் நெற்றால் கட்டி மொட்டினைச் செய்யலாம். இலை செய்வதற்கு 13 அங்குல பச்சைக்கம்பினை எடுத்து, ஒரு அங்குலம் மேல்நோக்கி விட்டு, பேனைக்குச்சியில் 5 முறை சுற்றவும். அதேமாதிரி, இரு பககமும் சுற்றி இரு அந்தங்களையும் சேர்த்து முறுக்கவும். பின் பச்சை ஸ்ரொக்கிங் நெற்றில் வைத்துக் கட்டி, கட்டுக்கம்பியுடன் சேர்த்துக் கட்டி, கட்டுக்கம்பிக்கு flower tape சுற்றவும். இறுதியாக, மொட்டினை மேலே வைத்து, பூக்களை கீழுமாக வைத்து, அப்பூக்களைச் சுற்றி இலைகளையும் வைத்து, ஓர் ஒழுங்கான பூச்செண்டினை உருவாக்கமுடியும்.

# அன்புத் தொடர்பும் பாலுணர்வும்; பிள்ளைகள் வழிகாட்டப்பட வேண்டும்!

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

இன்னும் சிலகாலம் சென்றதும், மேலும் பல பிரச்சினைகள் ஏற்படலாம். பழக்கப்படாத கேள்விகளை எம்மிடம் கேட்கக்கூடும்.

சிலவற்றிற்கு எம்மால் பதில் கொடுக்க முடிவதில்லை. அல்லது பதில் கொடுக்க நாம் விரும்புவதில்லை. இருப்பினும் பதில் கொடுக்காமல் இருந்தால் பிள்ளையில் சாதாரணமான மனவளர்ச்சி ஏற்படாது தடைப்படலாம். தமது மனதில் இருக்கும் சில பிரச்சினைகளை வேறுவிதத்தில் கூறுவர்.

பெற்றோருக்குச் சவால்விடும் விதத்தில்கூற ஆசைப்படுவர். முன்பு எமக்குக் கீழ்ப்படிந்தனர். ஆனால், இந்த வயதில் அப்படியல்ல. கேள்விகேட்க ஆசைப்படுவர். கேள்வி கேட்கவேண்டுமென்ற தூண்டுதலே அவர்கள் மனதில் பிரச்சினையாக இருக்கும். கேள்விகேட்க நினைப்பதே- மனதில், இந்தவயதில் ஆரோக்கியமாக இருப்பதன் அடையாளமாகும். கேள்விகேட்பது சரியா? அப்பாவின் மனம் துக்கப்படுமா? என்றும் யோசிப்பர். கேள்விகேட்கக் கூடாது. சவால்விடக் கூடாது என்று நினைத்தால், ஏதோ குறைபாடுள்ளது என்பது அர்த்தமாகும். அப்பா- அம்மா சொல்வதை அப்படியே ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. கேள்விகேட்க ஆசைப்படுவது அந்த வயதில் இயற்கையே. இந்த வயதில் உள்ள பிள்ளைகள் சொல்வதை ஏற்பதில்லை. சவால்விட்டுக் கேள்விகேட்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய வைகளையே ஏற்றுக்கொள்வர். முடியாதவற்றைப் புறக்கணிப்பர்.

பெற்றோர் கூறும் எல்லாவற்றையும் அப்படியே ஏற்றுக்கொள்ளப் பிள்ளைகளால் முடி வதில்லை. அதற்குக் காரணத்தை காட்டாமலிருந்தால் எமக்குச் சவால் விடுவர். சவால் விடுவது தயவுசெய்து காரணத்தைக் கூறுமாறு கேட்கவே. காரணத்தைத் தேடியே ஏற்றுக்கொள்வர்.

இந்த வயதிலுள்ள ஆண்- பெண் இருபாலாருக்கும் பாலுறுப்புப் பற்றிய உணர்வுகள் வேறுபட்டவையாக இருக்கலாம். பெண்ணை நோக்கும்போது பாலுணர்வு உடலுறுப்புக்களில் மட்டுமல்ல, முழுச்சரீரத்திலும் பரந்திருக்கும் உணர்வாக அனுபவிக்கக்கூடும். ஆணுக்குப் பாலுணர்வை அன்புடன் கலக்காது வேறு உத்வேகம் என உணர, ஆணால் முடி-



கிறது. ஏனையவற்றிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கமுடியும். ஆனால், பெண்பிள்ளையில் பாலுணரவு என்பதை அன்புணர்வு, விவாகப் பாதுகாப்புணர்வு, குடும்பவாழ்வு போன்றவற்றை வேறுபடுத்திப் பார்க்கமுடிவதில்லை. அவற்றுடன் பிணைந்துள்ளதாகவே காண்பர். ஆனால், ஆண்பிள்ளையில் பாலுணர்வையும், அன்பையும் வேறுபடுத்திக் காணும்நிலை இருக்கும். பெண்பிள்ளை இவையாவையும் தொடர்புபடுத்தியே பார்க்கும். பிரித்துநோக்க அவளால் முடிவதில்லை. ஆதலால், அன்பைப் பெறுவதற்காக ஆண்பிள்ளையின் பாலுறவு ஆசைக்கு இடம்கொடுக்கக்கூடும். ஆண்பிள்ளை பாலுணர்வை அதிக ஆசையாக எண்ணுவதால் அதைப்பெற்றுக்கொள்ள அன்பைக்காட்டுவதாக வெளிப்படுத்தலாம்.

இதனைப் பெற்றோர் அறிதல் வேண்டும். அதைப்பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும். ஆண்பிள்ளை மனமுதிர்ச்சி பெறாத ஒருவரானால், இந்த வயதில் விவாகத்துக்கு முன் - பாலுறவுத் திருப்தியை அனுபவிக்க, பெண்ணை ஸ்பரிக்க ஆசைப்படக்கூடும். தான், அன்புசெய்யும் பெண்பிள்ளையை விவாகம் முடிக்க வாக்குறுதி கொடுத்திருப்பதால், பாலுணர்வு திருப்தியைப்பெற ஆண்பிள்ளை ஆசைப்படும். பெண்பிள்ளை இந்த வேறுபாட்டை அறியாதிருந்தால் இடங்கொடுக்கக்கூடும். அன்பில்லாத ஒருவருடனும் பாலுணர்வுத் திருப்தியைப் பெற ஆண்பிள்ளையால் முடிகிறது. சிலநேரம் இதைப் பெண்பிள்ளை அறியாதிருந்தால் ஏமாறவும்கூடும். ஆகவே இந்த அறிவைப் பிள்ளைகளுக்குப் பெற்றோர் சொல்லிக்கொடுக்க வேண்டும்.

இந்த வயதிலுள்ள ஆண் - பெண்பிள்ளைகளுக்கு இந்த அறிவைக் கொடுத்து அன்புறவுக்கு வயதுவந்தபின் பழக இடமளித்தால், மனதில் பிள்ளைகளின் வளர்ச்சி ஏற்பட இடமுண்டு. ஆண்- பெண் சுபாவங்களை இருவரும் அறிந்திருந்தால், திருமணமாவதற்கு முன்பிருந்தே தம்மைப்பாதுகாத்து நல்லவுறவை வளர்த்துக்கொள்ளமுடியும். விவாகத்துக்கு நல்ல ஆயத்தத்துடன் ஒருவரைத் தெரிவு செய்யப் பிள்ளையால் முடிகிறது.

இதற்கு இடமளிக்காதிருந்தால், இரகசியமாகப் பிள்ளைகள் அன்புத்தொடர்பை வைத்துக்கொள்ள முயலுவர். இரகசியமான தொடர்பு எப்போதும் தவறானவழியில் செல்லச் சந்தர்ப்பத்தை அதிகரிக்கச் செய்யும். ஆகவே - உறவினருடன் பாடசாலையில், சங்கத்தில் மற்றவருடன் நல்லவிதத்தில் பழகவிடுவதால் நல்லநிலை ஏற்படக்கூடும். சதாரணமாகப் பெண்பிள்ளை தனது தாயாருடன் நல்லுறவை வளர்த்துக் கொண்டால், அதேபோல் ஆண்பிள்ளை அப்பாவுடன் நல்லுறவை வளர்த்துக் கொண்டால், அப்பாவை முன்மாதிரியாகக் கொண்டால்- அத்தாயும், தந்தையும் தம்மை முன் மாதிரியாகக் கொள்ளக்கூடிய விதத்தில் வாழ்ந்தால், இந்த வயதிலுள்ள பிள்ளைகள் எதிர்ப்பாலரோடு பழகும்போது தவறான வழியில் செல்லமாட்டார்கள். பிள்ளைகளின் அன்புத்தொடர்பை கேள்விப்பட்டதும் - பெற்றோர் பெரும்பாலும் கலவரப்படுகின்றனர். ஏன் கலவரப்படுகின்றனர்? தனது பிள்ளைகளுக்குப் பொருத்தமானவர் இல்லாது இருக்கலாம் என்ற பயமே இதற்குக் காரணமாகும்.

## வாழ்வில் வளர்ச்சி நிலைகள்; அறிதலும் புரிந்துகொள்வதும்

பன்னிரண்டு, பதின்மூன்று வயதில் பிள்ளைகள் அன்பு என்று நினைப்பது கவர்ச்சியை. இவ்வாறு வளர்ந்தவர்கள்கூட நினைக்கலாம். ஆரம்பகாலங்களில் உருவம் அழகாக இருப்பதால் அல்லது அழகாகக் கதைப்பதால் அல்லது நல்ல குணங்களால் திறமைகளை முன்கொண்டு கவர்ச்சியினால் ஒருவரின் மனம் எதிர்ப்பாலான ஒருவரில் செல்லக்கூடும். அதாவது, ஆண்- பெண்ணிலும், பெண்- ஆணிலும் கவரப்படுவர். இதனை அன்பு என்று கூறமுடியாது. கவர்ச்சி மட்டுமே. கவர்ச்சி என்பது உணர்வு. இது உருவாகும் வேகத்திலேயே மாறிவிடவும் கூடியது.

(தொடரும்)

எஸ்.ஜே.யோகராசா
உளவளத்துணை ஆலோசகர்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் - வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு
- திருக்குறள்.

# நமது நோக்கு

## உரத்துச் சொல்லும் செய்தி!

கடந்த ஓராண்டு கால சமாதான வாழ்வில் - துப்பாக்கிகள் ஓய்ந்துள்ளனவே தவிர, மக்கள் மீதான கெடுபிடிகள் குறைவடையவில்லை என தேசியத் தலைவர் வே.பிரபாகரன் - கிளிநொச்சியில் தன்னைச் சந்தித்த, போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின், புதிய தலைவரிடமும், விடைபெற்றுச் செல்லும் தலைவரிடமும் எடுத்துக் கூறியிருக்கிறார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஓராண்டு நிறைவுக்குப் பின்னர், தேசியத் தலைவர் முன்வைத்துள்ள இந்தக் கருத்து - சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரையில் மிக முக்கியமானதும் - கடந்த ஒரு வருடத்தைப் பற்றிய முழுமையான, மிகச் சரியான கணிப்பீடுமாக அமைந்திருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, தனது பிரதான, முக்கியமான வாக்குறுதியாக சமாதானத்தை முன்வைத்து - ஆட்சிபீடம் ஏறியபின்னர்,

அது தொடர்பில் ஆரம்பத்தில் எழுந்துவந்த முன்னேற்றகரமான நடவடிக்கைகள் சில, காலப்போக்கில் 'உலக்கை தேய்ந்து உளிப்பிடியான' கதையாக - உறுதிமொழிகள் செயலாக்கம் பெறத் தவறியதாகவே போய்விட்டன.

புலிகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது, அதில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதில் இந்த ஒரு வருடமும், பெரிதாக எதனையும் சாதித்ததாகத் தெரியவில்லை.

உறுதியளித்தபடி, மக்களது சுமுக வாழ்வுக்குத் தேவையான நடவடிக்கைகள் எதுவுமே அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படவில்லை என்பதோடு -

மாறாக - மக்கள் மீதான கெடுபிடிகளையும், போராளிகள் மீதான அடாவடித்தனங்களையுமே படையினர் கிரமமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இதனையே தேசியத் தலைவர், கண்காணிப்புக் குழுவினருடனான சந்திப்பின்போது - ஓராண்டு புரிந்துணர்வு காலத்தில் - ஒப்பந்தத்தின் சில விதிமுறைகள், நிபந்தனைகள், கட்டுப்பாடுகளை படையினர் நிறைவேற்றத் தவறியதைச் சுட்டிக்காட்டியிருப்பதோடு -

இது சமாதான முயற்சியில் படையினருக்கு - உண்மையான, நேர்மையான நம்பிக்கையின்மையை எடுத்துக் காட்டுகின்றது என்றும் அவர்களிடம் எடுத்துரைத்துள்ளார்.

அதேவேளை -

பெண் போராளிகள் படையினரால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டமை, ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபடுகின்றமை, போராளிகள் அசிங்கப்படுத்தப்படுகின்றமை, பொதுமக்கள் சுடப்படுகின்றமை ஆகியன படையினரால் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் , தளம்பாமல் பொறுமைகாத்து, நாம் சமாதானத்தைக் கடைப்பிடித்து வருகின்றோம்.

ஆனால், அரசு எம்மீது பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றது என விசனம் தெரிவித்திருக்கிறார்.

தேசியத் தலைவரின் இந்தக் கருத்துக்கள் - சமாதானச் சூழல் பற்றிய நிதர்சனமான மதிப்பீடு மட்டுமல்ல, அரசாங்கத்திற்கும் வெளியுலகுக்கும் முக்கிய செய்திகளையும் சொல்வதாக அமைந்துள்ளது.

சமாதானத்தின் உண்மையான அர்த்தம் இன்னமும் அரசாங்கத் தரப்பிலிருந்து மக்களைச் சென்றடையவில்லை என்பதோடு,

இருதரப்பும் இணக்கம் கண்ட அடிப்படை விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதில் கூட படைத்தரப்பு அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை என்பதையும் தலைவர் பிரபாகரன் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

அதேவேளை - அடாவடித்தனங்கள், குழப்பங்கள், அத்துமீறல்களை படையினர் விளைவித்து வருகின்றபோதும் - விடுதலைப் புலிகள் சமாதானத்தின் மீதும், அமைதி வழியிலான தீர்வின் மீதும் வைத்திருக்கின்ற உறுதியான நம்பிக்கையின் பேரில் - அவர்கள் பொறுமை காத்திருப்பதையும் அவர் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்டியிருக்கிறார்.

இந்தவகையில் - கடந்த ஓராண்டு அமைதிக்காலம் தமிழர் தரப்பிற்கு திருப்தியாக அமைந்துவிடவில்லை என்ற தலைவரது செய்தியை உடனடியாகவே கருத்திலெடுத்து ஆவன செய்யவேண்டிய நிலையில் அரசாங்கமும், சர்வதேசமும் இருக்கின்றன.

இலங்கைத்தீவில் - உண்மையான, நிரந்தரமான அமைதியை ஏற்படுத்த அரசாங்கம் இனியும் வாளாவிருக்க முடியாது என்ற அழுத்தமான வெளிப்பாட்டை - விடுதலைப் புலிகள் வெளியிட்டிருப்பதாகவே சம்பந்தப்பட்டோர் இதனைக் கருத்திலெடுக்க வேண்டும்.

புலிகளின் பொறுமையும், அமைதியின் மீதான அர்ப்பணிப்பும் - தொடர்ந்து நீடிப்பதென்பது, தமிழ் மக்களுக்கு சுதந்திரமான, சுமுக வாழ்வைத் தருவதில்தான் தங்கியிருக்கிறதென்பதை அரசாங்கமும், சர்வதேசமும் உணரவும், செயற்படவும், தவறுமாயின் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே ஏற்றுக்கொள்வதுபோல, அமைதிக்கான இறுதிச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டுவிட்டால், நாட்டையே அழிவுக்குள்ளாக்கும் நிலையே மீண்டும் தோன்றுமென்ற - அச்சமே அரசாங்கத்தின் அசமந்தப் போக்கால் ஏற்படுகின்றது.

### இலஞ்ச ஆணையாளர் மீதான விசாரணைக்குழு

# பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன முதல் அமர்விலேயே விலகினார்!

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஆணையாளருக்கு எதிரான புகார்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் விசேட விசாரணைக் குழுவிலிருந்து - பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன திடீரென விலகிவிட்டார்.



இலஞ்ச ஊழல் ஆணையாளராகக் கிங்ஸ்லி விக்ரமசூரிய - இரகசியங்களைப் பேணும் கடமையிலிருந்து தவறிவிட்டார் என அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்த குற்றச்சாட்டின் பெயரில் - 76 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுக் கொடுத்த கோரிக்கையின் அடிப்படையில் - நாடாளுமன்ற சபாநாயகர் இந்த விசேட விசாரணைக்குழுவை அமைத்திருந்தார்.

அமைச்சர் திஸநாயக்கவிற்கு எதிரான இலஞ்ச ஊழல் விசாரணையின் தகவல்களை கிங்ஸ்லி விக்ரமசூரிய - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குச் சட்டவிரோதமாகத் தெரியப்படுத்தினார் என்றே குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் ஆராய நியமிக்கப்பட்ட விசேட நாடாளுமன்ற விசாரணைக் குழுவின் தலைவராக இருந்த திலக் மாரப்பன தலைமையில் - இந்தக் குழுவின் முதலாவது அமர்வு நடைபெறவிருந்தபோதே, தனிப்பட்ட காரணங்களால், தான் இந்த விசாரணைக் குழுவிலிருந்து விலகுவதாகத் திலக் மாரப்பன அறிவித்துள்ளார்.

### ஹலோ ட்ரஸ்ட் ஏற்பாட்டில்

## மேலும் எழுபத்தைந்து பேருக்கு மிதிவெடி அகற்றும் பயிற்சி!

யாழ்.குடாநாட்டில் மிதிவெடி அகற்றும் பணிக்காக ஹலோ டிரஸ்ட் மிதிவெடி அகற்றும் நிறுவனம் மேலும் 75 பேருக்கு பயிற்சியளித்து வருகிறது.

இந்த பயிற்சி பெறுபவர்கள் சில வாரங்களில் பயிற்சியை முடித்து வெளியேறவுள்ளனர். மிதிவெடி புதைக்கப்பட்டுள்ள இடங்களின் தரவுகளை சேகரித்துக் கொண்டிருக்கும், யாழ். கச்சேரியிலமைந்துள்ள மிதிவெடி அகற்றும் அலுவலகம் - ஏற்கனவே பயிற்சி பெற்று வெளியேறியவர்களையும், வெளியேற உள்ளவர்களையும் இணைத்து சேவையில் ஈடுபடுத்த உள்ளது என ஹலோ ட்ரஸ்ட் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# நரம்பியல் நோய்களை இனங்காணவென யாழ்.வைத்தியசாலைக்கு சி.ரி.ஸ்கானர்!

## இந்தியத் தூதரகம் அன்பளிப்புச் செய்தது

யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சி.ரி.ஸ்கானர் கருவி ஒன்றை இலங்கைக்கான இந்தியத் தூதரகம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. நரம்பியல் நோய்களை இலகுவாக அடையாளம் கண்டுகொள்வதற்கும், சிகிச்சை வழங்குவதற்கும் இக்கருவி மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதுவரை காலமும் இவ்வசதிகள் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஏற்படுத்தப்படவில்லை.

சுமார் இரண்டு லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இக்கருவி, அடுத்தமாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நரம்பியல் நிபுணரான வைத்தியகலாநிதி குணானந்தன் - இவ்விடயம் தொடர்பாக இந்திய தூதரகத்துடன் தொடர்பு கொண்டு, மேற்கொண்ட முயற்சியைத் தொடர்ந்தே இக்கருவியை அன்பளிப்பாக வழங்க இந்தியத் தூதரகம் முன்வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# சுவர் இடிந்து வீழ்ந்து மாணவன் படுகாயம்!

## பாடசாலையில் பந்து விளையாடியபோது பரிதாபம்

பாடசாலை மதில் இடிந்து விழுந்ததில் மாணவர் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை - சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

பாடசாலை மைதானத்தில் மாணவர்கள் விளையாட்டில் ஈடுபட்டவேளை, பாடசாலையின் கட்டிமுடிக்கப்படாத நிலையிலிருந்த பிளாட்டில் விழுந்த பந்தினை மாணவன் ஒருவன் எடுக்க முற்பட்ட வேளையே, கட்டடச் சுவர்கள் விழுந்தன.

இதனால் - இப்பாடசாலையில் தரம் பத்தில் கல்விகற்கும் கோ.சந்திரரூபன் (வயது 16) என்ற மாணவன் படுகாயமடைந்தார்.

இப்பாடசாலையில் 1998 ஆம் ஆண்டு இதேபோன்று கட்டடச் சுவர் இடிந்து விழுந்ததில் எஸ்.மதிவாணன் (வயது 16) என்ற மாணவன் பலியானார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த பத்துவருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இக்கட்டடக்கட்டுமானப் பணிகள் இதுவரை பூர்த்தியாகாத நிலையில் இருப்பதாலேயே - இந்த ஆபத்துக்கள் தொடர்வதாக மாணவர்கள் மற்றும் பெற்றோர் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (15)

# வடமராட்சி பறவைகள் சரணாலயம் கவனிப்பாரற்று அழியும் ஆபத்தில்!

வடமராட்சி கிழக்கிலுள்ள பறவைகள் சரணாலயம் பாதுகாக்கப்படாமல், கவனிப்பாரற்று அழிந்துபோகும் நிலையிலுள்ளது.

வண்ணங்குளம் - நித்திய வெட்டை தொடக்கம் சுண்டிக்குளம் வரையான நீர்ப்பரப்பளவையும், நிலப் பரப்பையும் கொண்ட இச்சரணாலயத்தின் வட எல்லையாகப் பெருங்கடலும், தெற்கு எல்லையாக் கொம்படி- ஊரியான் சிறுகடலும் உள்ளது.

ஆங்கிலேயர் காலத்தில் மிகவும் பாதுகாக்கப்பட்ட இச்சரணாலயத்திற்குப் பலவிதமான வெளிநாட்டுப் பறவைகள் வந்து தங்கிச்செல்வது வழமை என்றும் - அவை வடகீழ் பருவக்காற்று ஆரம்பித்து சில வாரங்களின் பின் வந்து - மீண்டும் தென்மேல் பருவக்காற்று அரம்பமாவதற்கு முன்னர் திரும்பிச் சென்றுவிடும் எனவும் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த பல வருடங்களாக இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருந்த இப்பிரதேசத்திலுள்ள பல மரங்கள் தறிக்கப்பட்டும், குளங்கள் திருத்தப்படாமல் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பிரதேசசபை வாகனங்களை ஒப்படைக்க அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன கோரிக்கை

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டின் பிரதேச சபைத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வாகனங்கள் உடனடியாக யாழ். செயலகத்தில் ஒப்படைக்கப்படவேண்டுமென்று அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன அறிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டுப் பிரதேசசபைகளின் பதவிக்காலம் ஏற்கனவே முடிவடைந்துள்ளபோதிலும், அந்தச் சபைகளின் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்கள் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படவில்லை.

யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு திட்டங்களுக்குத் தேவையான வாகனங்கள் பற்றாக்குறையாக உள்ளநிலையில், இவ்வாறு அரச வாகனங்கள் மீள ஒப்படைக்கப்படாமை நெருக்கடிகளை அதிகரித்துள்ளதாகப் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.



20 வருடங்களுக்குப் பின்னர், 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற திருவிழாவின் திருச்சொரூப பவனியின்போது எடுக்கப்பட்ட படம்.

# ஆர்ப்பரிக்கும் கடல் நடுவே தனித்தீவில்

# அருள்பாலிக்கும் அந்தோனியார்

நெடுந்தீவுப் பிரதேச செயலகப் பிரிவுக்குள் உட்பட்டதும், இலங்கைக்கு உரியதுமான கச்சதீவு, எந்தவிதமான குடியிருப்புக்களும் அற்ற ஒரு தீவாகும். இங்கு பிரசித்தி பெற்ற புனித அந்தோனியார் யாத்திரைத்தலம் மாத்திரம் அமைந்துள்ளது.

இவ்வாலயத்தின் மூப்பர் -அதாவது பொறுப்பானவர் நெடுந்தீவைச் சேர்ந்தவரேயாகும். இந்தப் பொறுப்பு பரம்பரை ரீதியாகவே இன்றுவரை தொடர்கிறது.

இவ்வாலயத்தில் வருடாந்தம் பங்குனி முதல்வாரத்தில் இரண்டு நாட்கள் திருநாள் நடைபெறும். இதற்கென அரசாலும் நிதி வழங்கப்படும். இவ்வாலயத்திற்கான அடித்தளம் 1907 ஆம் ஆண்டளவில் இடப்பட்டு, 1913 ஆம் ஆண்டளவில் தான் ஆலயம் கட்டப்பட்டதாக வரலாறு கூறுகின்றது.

நெடுந்தீவு மேற்குப் பகுதியில் இருந்து சுமார் 12 கடல் மைல் தூரத்திலும், நெடுந்தீவு தென்மேற்கு முனைப் பக்கமாகவுமே கச்சதீவு அமைந்துள்ளது.

நெடுந்தீவிலிருந்து கச்சதீவின் அமைவிடத்தைக் கண்கூடாகப்

## கச்சதீவு உற்சவம் நாளை மறுதினம்

பார்க்க முடியாது. ஆனால், கடற்கொந்தழிப்பற்ற, சீரான காலநிலை நிலவும் காலத்தில், கச்சதீவிலிருந்து நெடுந்தீவைப் பார்க்கமுடியும். ஏனென்றால், கச்சதீவு கடல்மட்டத்திலிருந்து சுமார் 15-20 அடி வரையான உயரத்திலேயே அமைந்துள்ளது. இதனால் தான் இத்தனை காலத்துக்கும் சமுத்திரத்தின் மத்தியில் யாருமில்லாத தீவாக நிலைத்து நிற்கிறது எனலாம்.

கச்சதீவுப் புனித அந்தோனியார் ஆலயம்- சுமார் 30அடி நீளமானதாகவுள்ளது. இங்கு ஒரு சிறிய மணிக்கோபுரமும் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் பிரதானவாயில், தென் கிழக்கு முனைநோக்கி அமைக்கப்பட்டுள்ளது.

தீவினைச் சுற்றி ஒவ்வொரு திக்கிலும், கடற்கரையோரமாக இறை தூதர்களின் திருச்சொரூபங்கள் வைக்கப்பட்டுள்ளன. இதுவும் கச்சதீவுக்கான காவலரண்கள்போல கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றன. தீவின் மையப்பகுதியில், புளியமரத்தின் கீழ் சூசையப்பர் திருச்சொரூபம் அமைக்கப்பட்டுள்ளது.

வெயில் கொடுமையிலும் அத்தீவில இத்திருச்சொரூபம் குளிர்மை தாங்கிநிற்கின்றது.

ஒட்டுமொத்தமாக, இத்தீவின் உள்ளே நுழைந்தால், தெய்வ பக்தி மக்கள் மனதில் குடிகொண்டுவிடும். அத்துடன், பயணமும் நீண்ட கடற்பயணமாகையால், இறைசிந்தனையுடனேயே அனைவரும் செல்வர். இதற்கு இறைபயமும் ஒரு காரணம்தான.

இங்கு செல்வோர் அவசியமாகக் குடிதண்ணீர் கொண்டு செல்ல வேண்டும். ஒரேயொரு உவர்நீர்க் கிணறு மட்டும்தான் அங்குள்ளது.

அங்கு செல்வோர் தங்கிநிற்க எந்தவிதமான மண்டப வசதிகளும் இல்லை, கோயிலைத்தவிர. இதற்கேற்ற வகையில் தீவின் பௌதீகச் சூழல் அமைந்துள்ளது. மரங்கள் குட்டையானதாகவும், கூடாரம் போலவும் இருப்பதனால்- அதன் கீழ்ப்பகுதியைத் துப்பரவு செய்துவிட்டு வாழலாம்.

அங்கு வெயில் கொடுமையைத் தாங்குவதற்கு ஏற்ற வகையில் இயற்கையாகவே அமைக்கப்பட்ட கூடாரங்கள் போலவே மரக்குகைகள் அமைந்துள்ளன.

தீவுக்கென இறங்குதுறை ஒன்று இல்லை. கரை வரைக்கும் படகுகள் செல்லக்கூடியதாக இருக்கும். திருநாட்காலங்களில் தற்காலிகமாகப் பாலம் அமைக்கப்படும். இருப்பினும், மக்கள் தீவினைக் காணத்துடிக்கும் அவாவில் படகிலிருந்து நீருக்குள்ளும், கரைக்கும் பாய்ந்து சென்றுவிடுவார்கள். வெளிப்புறத் தோற்றமே அந்தளவுக்கு மக்கள் மனதைக் கொள்ளை கொள்ளக்கூடியதாகவுள்ளது.

தீவின் தென்கிழக்கு முனைப்பகுதியில் பெரும் கற்பாறைகள் அமைந்துள்ளன. அவை கடல்நீரால் அரிக்கப்பட்ட குகைபோலவும் உள்ளன. சுமார் 75m நீளத்துக்கு இவை தொடர்ந்து செல்கின்றன. அத்துடன், இவை கடல் மட்டத்திலிருந்து 20 அடி உயரத்திலுள்ளன. அத்துடன், இப்பகுதிகள் காலப்போக்கிலே கடலரிப்பினால் உடைந்து விடக்கூடியநிலை காணப்படுவதுடன், பல பாறைகள் கடலரிப்பினால் உடைநதும் காணப்படுகிறது. அத்துடன், ஏனைய கடற்கரைப் பகுதிகளும் மணல், கடற்சலலிகள் போன்றவற்றால் மெருகூட்டப்பட்டுள்ளன.

இப்படியான ஒரு தீவிலே காலடி வைக்கும்போது, ஒரு கவிஞனின் காதல்வரிகள்தான் நினைவில் வருகின்றது.

*"யாரும் இல்லாத தீவொன்று*
*வேண்டும்*
*அங்கு என்னோடு நீமட்டும்*
*வேண்டும்"*

அத்தனை தூரம் மிகவும் அழகானதும், அமைதியானதுமான ஓர் தீவாகும். இத்தீவின் வனப்பைக் காணக் கண்கோடி வேண்டும்.



*கச்சதீவுக் கரையிலேயே படகுகள் அணைக்கப்படுவதையும், ஆர்வத்தில் சிறுவன் ஒருவன் படகிலிருந்து பாய்வதையும் காணலாம்.*

இத்தனை சிறப்புமிக்க இத்தீவானது, இத்திருநாட்காலத்தில் முக்கியம் பெற்றதாகச் சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் விளங்கியது.

இத்திருவிழாவுக்கெனத் தென்னிந்தியாவிலிருந்தும், இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் பெருமளவு மக்கள் செல்வார்கள். அங்கே இந்திய- இலங்கை மக்கள் மத்தி யிலே ஒரு பண்டமாற்று வியாபாரம் நடைபெறும்.



*கடலரிப்பினால் குடையப்பட்ட பாறைகள்.*

இந்திய மக்களுக்குத் தேவையான தேங்காய், தேங்காயெண்ணெய், சவர்க்காரங்கள் மற்றும் ஆடம்பரப்பொருட்களை இலங்கை மக்கள் கொடுக்க, அதற்குப் பதிலாக இந்தியர்கள் புடவைகள், வெண்கல, பித்தளை, சில்வர் பாத்திரங்கள போன்றவற்றையும் கொடுத்துப் பரிமாற்றிக்கொள்வார்கள்.

## செய்திக்கட்டுரை

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒரு பண்டமாற்று வியாபார மையமாகக் கச்சதீவும், பண்டமாற்றிக் கொள்ளும் ஒரு நாளாக அந்தோனியார் திருநாளும் விளங்கியமை இன்றும் எம் முதியோர் மனதில் ஊஞ்சலாடுகின்றது.

இன்றுகூட எங்கள் வீடுகளில் எமது பெற்றோர் கூறுவார்கள்- "இந்தப் பித்தளைக் குடம் கச்சதீவிலே தேங்காயெண்ணெய் கொடுத்து வாங்கினேன்" என்று. அந்தளவு தூரம் கச்சதீவுத் திருநாள் வர்த்தகரீதியாகவும் மக்கள் மத்தியில் நிலைத்திருக்கின்றது. அத்துடன், ஒவ்வொரு வீட்டிலும் அடிக்கடி முணுமுணுக்கும் பெயராகவும் கச்சதீவு மண் விளங்குகின்றது.

கடந்த 20 வருடங்களாக நாட்டின் அனைத்து நிலைகளும் குழம்பியபோது, கடற்றொழில்களும் பாதிப்படைந்தமையை நாம் அறிவோம். ஆனால், இக்காலப்பகுதியினைச் சாதகமாகக் கொண்டு இந்திய மீனவர்கள் தங்களின் கடற்தொழிற்தளமாகக் கச்சதீவினை உருவாக்கி விட்டனர். அந்தநிலை இன்றும் தொடர்கின்றது. அவர்கள் மீன்பிடித் தொழிலின்போது ஓய்வு எடுக்கவும், இரவில் தங்கிச் செல்லவும் ஒரு மையமாக உள்ளதுடன், அங்கு தங்கிவிட்டு நெடுந்தீவு கடற்பகுதியிலும் மீன்பிடித் தொழிலை அத்துமீறி மேற்கொள்கின்றனர் என்பது தற்போது அடிக்கடி செய்தி ஊடகங்களூடாக நாம் அறிகின்றோம்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க கச்சதீவு அந்தோனியார் ஆலயப் பெருவிழாவில் அனைவரும் கலந்துகொண்டு அருள் பெறுவதுடன், எழில் மிகு தீவையும் காண்பதற்கு இத்திருநாள் எமக்கு ஒரு அரியவாய்ப்பாகும்.

**கண்ணன்**

---

# வாழ்க்கைக்குச் சில வழிகள்!

## ஆன்மீக அரங்கம்

ஒரு மொட்டு மலராவதற்கு என்னென்ன வேண்டுமோ, அவை அதிலேயே அடங்கியுள்ளது. ஒவ்வொரு இதழாகப் பிரிந்து, அது மலராக மலர்கின்றதல்லவா? அதுபோல, நமக்குள் எல்லாமே உள்ளது. நாம் இந்த உலகத்துக்கு வந்தவுடன் செய்த முதற்செயல் என்ன தெரியுமா? என்ன செயல்? அழுகையா? இல்லை. முதலில் முச்சை உள்ளே இழுத்துக் கொண்டோம். அப்புறம்தான் அழுகை. இரண்டாவது செயல் அழுவது. இந்த உலகத்தில் கடைசிச் செயல் என்ன தெரியுமா? மூச்சை விட்டுவிடுவோம். பிறக்கும்போது நாம் அழுதோம். மற்றவர்கள் சிரித்தார்கள். இறக்கும்போது மற்றவர்களை அழவைக்கிறோம். நாம் சிரித்துக்கொண்டே போகவேண்டும்.

வாழ்க்கை முழுவதும் ஏதேனும் ஒரு தொல்லையில் அழுது கொண்டு இருக்கிறோம். மற்றவர்களையும் அழவைக்கிறோம். இது ஒரு வாழ்க்கையா? இந்த வாழ்க்கை நமக்கு ஒரு உத்வேகமான பரிசு. கடவுளிடமிருந்து வந்திருக்கிறது. இந்த வாழ்கையை நாம் நன்றாக வாழந்தோமானால், அதைவிடச் சிறந்த பூஜையே கிடையாது. அதைவிடப் பெரிய பிரார்த்தனை கிடையாது. சுத்தமாக மனதை வைத்துக்கொள்ள வேண்டும். மனதைக் குளிர்ச்சியாக வைத்துக்கொள்ள வேண்டும். நாம் என்ன செய்கிறோம்? சிறிய விஷ யங்களுக்குக்கெல்லாம் மனதைக் குழப்பிவிடுகிறோம்.

கடந்த விஷயத்தையெல்லாம் நினைத்துக் கோபப்படுகிறோம். நம்மீது நாமே கோபப்படுகிறோம். ஐயோ, இப்படிச் செய்திருக்கக் கூடாது. அப்படிச் செய்திருக்கக் கூடாது என்று நம்மை நாமே திட்டுகிறோம். கலங்கின மனதோடு நாம் என்ன பூஜை செய்தாலும், எந்தக கோயிலுக்குப் போனாலும், கும்பிட்டாலும் பயன்கிடையாது. மனதைத் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும். கோயில், குளம் என்று அலைந்து பயனில்லை. நீங்கள் எங்கே இருக்கின்றீர்களோ அங்கேயே, வீட்டிலேயே அறிவினால் நம் மனதை நாம் தெளிவுபடுத்த வேண்டும்.

வாழ்க்கையில் பல பரிமாணங்கள் (Levels) உண்டு. மூச்சு, உடல், சூழ்நிலை, மனம், புத்தி, நம்சுகம் -அதாவது அகந்தை, ஞாபகசக்தி, சித்தம், ஆத்மா என ஏழு பதிவுகள். இவற்றில் நாம் ஒரு நோக்கு, ஒரு திருஷ்டியைக் கண்டு கொள்ளவேண்டும்.

தலை வலித்தாற்தான் நாம் தலையைப் பற்றி நினைக்கின்றோம். அதுவரை தலை ஒன்றிருப்பதை மறந்து விடுகின்றோம். அதே போல், கால்வலித்த பிறகுதான் காலிருப்பதான அறிவு அந்தப் பக்கம் செல்கிறது. முதுகு வலித்தாற்தான் முதுகு இருக்கிறது என்ற உணர்வு உண்டாகிறது.

நாம் இந்த உடலைச் சோதனை செய்து பார்க்க வேண்டும். பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்- 'பதார்த்த ஞான மோட்சம்' என்று. இந்த உடலை நன்றாகக் கவனித்துப் பாருங்கள்.

வீட்டில் பெரியவர்கள் பார்க்காமலிருந்தால், குழந்தைகள் சத்தம் போடுவார்கள். பெரியவர்களின் கவனம் தம் பக்கம் வரவேண்டுமென்று சத்தமிடுவார்கள். அதேபோன்று, நம் உடலை நாம் கவனித்துப் பார்க்கவேண்டும். அதேபோல், இந்த மூச்சையும் கவனிக்க வேண்டும். மூச்சில் அநேக இரகசியங்கள் அடங்கியிருக்கின் றன.

உலகத்தில் நமக்கு எவ்வளவோ சௌகரியங்கள் கிடைத்திருக்கின்றன. அன்பு கிடைத் திருக்கிறது. இந்த அன்புக்கு நம் மனதல் நன்றி உண்டானால், அந்த நன்றியே நம் மனதில் இருக்கும். **Tension** ஐக் கரைத்து, இறுக்கத்தைப் போக்குவதற்கும் இது ஒரு சிறந்த வழியாகும்.

**- கவிமாமணி.**




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## காதலோ காதல்


சில்பா ஷெட்டி, ஷமீதா ஷெட்டி - யாரைக் கவிழ்க்க...?

கிரிக்கெட் என்பது கனவான்களின் விளையாட்டு. ஒரு அற்புதமான, எல்லோராலும் நேசிக்கக்கூடிய விளையாட்டு என்ற காலம் போய், ஒரு கேவலமான நிலைக்கு இது தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறது என்ற நிலைப்பாடு, கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஒருவிதமான கவலையைக் கொடுத்திருக்கின்றது.

முக்கியமாக கிரிக்கெட்டோடு சூதாட்டம், போதைப்பொருள் பாவனை ஆகியனதான் எல்லோராலும் பரபரப்பாகப் பேசப்பட்டுக்கொண்டு வருகின்றன. இதையெல்லாம் தாண்டி ஒரு விடயம் கிரிக்கெட் ஆட்டங்களுக்குள் புகுந்து விளையாடிக் கொண்டிருக்கிறது. இது கிரிக்கெட் வீரர்களுக்கு ஏற்பட்ட ஒரு புற்றுநோய் என்றே கூறலாம்.

விவியன் ரிச்சட்ஸ், பிரபல ஹிந்தி நடிகை நீனா குப்தாவுடன் பகிரங்கமான தொடர்பு வைத்திருந்ததை இப்போதும் நினைவு கூரலாம். இந்திய சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே, நடிகை சோபனா வீசிய பந்தில் கிளீன் போல்ட் ஆனது யாவரும் அறிந்த உண்மை. இதேபோல் ஒரு சிறந்த இந்திய அணித் தலைவர் அசாருதீன், ஹிந்தி நடிகை சங்கீதா பிஜ்லானியிடம் சரண் புகுந்து தனது சொந்த மனைவியையே, விவாகரத்துப் பண்ணியது எவ்வளவு மட்டமான செயல் என்பதும் அத்துடன், அவர் கிரிக்கெட் ஆட்டங்களில் இந்தப் பிரச்சினைகளால் எவ்வளவு தூரம் தன்னுடைய Power of Concentration இனை இழந்தார் என்பதும் கவனித்துப் பார்க்கப்படுதல் வேண்டும். இன்றும் இந்திய அணித்தலைவர் கங்கூலியும் நடிகை நக்மாவும் பரபரப்பான காதல் ஜோடிகளாகத் திகழ்கின்றனர்.


அசார் - சங்கீதாவே சரணம்.

கிரிக்கெட் வீரர்களுக்கும், திரைப்பட நடிகைகளுக்குமிடையிலான தொடர்பு, கிரிக்கெட் ஆட்டங்களின் போக்கையே மாற்றிக் கொண்டிருக்கிறது என்பதனை மறுதலிக்க முடியாது. பொதுவாக, உலகிலுள்ள கிரிக்கெட் வீரர்களுக்கெல்லாம் பெண் ரசிகைகள் அதிகமாக இருப்பது யாவருமறிந்த உண்மை. இருந்தபோதிலும், இந்திய வீரர்களே கூடுதலாக இத்தகைய நடிகைகள் சம்பந்தமான சர்ச்சைகளில் சிக்கிக் கொள்கிறார்கள்.

அன்றைய ரவிசாஸ்திரி தொடக்கம் இன்றைய கங்கூலி வரை நடிகைகளே சரணம் என இருக்கின்ற காலம் மிகவும் நகைப்பாகத்தான் இருக்கின்றது. ரவிசாஸ்திரி அணித் தலைவராக இருந்த காலகட்டங்களில் ஹிந்தி நடிகைகள் பலருடன் பரபரப்பாகப் பேசப்பட்டவர். அதேபோல் அஜய் ஜடேஜாவும் பிரபல ஹிந்தி NO. 1 நடிகை மாதுரி டிக்ஷித்தும் மிகவும் நெருக்கமாக இருந்தவர்கள்.

அதேபோல் மேற்கிந்திய அணியின் பிரபல நட்சத்திர ஆட்டக்காரர்

அத்துடன் இந்திய அணி எங்கெல்லாம் கிரிக்கெட் ஆட்டங்களில் பங்குபற்றுகின்றதோ, அங்கெல்லாம் நடிகைகள் பட்டாளம் குவிவது வாடிக்கையாகிவிட்டது.

தற்போது நடந்துவருகின்ற உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில், நடிகைகள் குறிப்பாக இந்திய நடிகைகள் அதிகமாகக் காணப்படுவதாக தென்னாபிரிக்காவிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நடிகைகள் தொல்லை கிரிக்கெட் விளையாட்டை எந்தளவுக்குப் பாதிக்கின்றது என்பதனை ஒருதரம் சிந்திக்கவேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது. நடைபெற இருக்கின்ற SUPER SIX போட்டிகளில் நடிகைகளின் களியாட்டத் தொல்லைகள் எந்தளவுக்கு இருக்கும் என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். LOVE IS BLIND.

- சுதர்சினி.

## நாளும் ஒரு வினா

1999 உலகக் கிண்ணப் போட்டிகளின் MAN OF THE SERIES யார்?

லான்ஸ் குளூஸ்னர் (தென்னாபிரிக்கா)

## நஸார் - நீங்களா பலிக்கடா?

உலகக்கிண்ண SUPER SIX போட்டிகளிலிருந்து இங்கிலாந்து நீக்கப்பட்டதும், இங்கிலாந்தின் அணித்தலைவர் நஸார் ஹுசைன்-தான் ஒருநாள் அணியின் தலைமைப்பதவியிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்தார். தன்னைவிட இளவயது வீரர்கள் தன் பொறுப்பை ஏற்கவேண்டும், தனது முடிவு சரியானது என்ற சாரப்பட அறிக்கையும் வெளியிட்டுள்ளார். இதேவேளை, தான் தொடர்ந்தும் டெஸ்ட் அணித் தலைவராக இருப்பதற்கும் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - சிம்பாப்வேயுடனான ஆட்டத்தில் அங்கு சென்று பங்கேற்காமல் விட்டமை நஸார் ஹுசைனைப் பெரிதும் பாதித்துள்ளதாகத் தெரிகின்றது. அவரது கருத்துப்படி, ECB இந்த விடயத்தில் சரியான அணுகுமுறையைக் கைக்கொள்ளவில்லை என்ற தொனி மேலோங்கி நிற்கிறது. இதற்கு மேலாக இன்னொரு JOKE என்னவென்றால், எது எவ்வாறாயினும் தங்கள் பாதுகாப்புக்குச் சரியான உத்தரவாதம் தரப்படாமையே தாங்கள் அங்கு செல்லாமைக்குக் காரணம் என்றும், இது நஸாருக்கு நன்கு தெரியும் என்றும் சப்பைக்கட்டுக் கட்டுகின்றது ECB. இது விழுந்தும் மீசையில் மண் படவில்லை என்று கூறுமாப்போலத்தான் இருக்கிறது.



இதேவேளை, இங்கிலாந்து, நியூசிலாந்து நாடுகளுடன் இணக்கமான போக்கைக் கடைப்பிடிப்பது போல் காட்டிக்கொண்ட அவுஸ்திரேலியா, சிம்பாப்வேக்குச் சென்று வெற்றிவாகையும் சூடியது. எனவே அந்த நான்கு புள்ளிகள் அவுஸ்திரேலியாவுக்கு மேலதிகம். ஆனாலும் அதையும் சேகரித்துக் கொண்டார்கள். இங்கிலாந்துக்கு அந்த நான்கு புள்ளிகள் அத்தியாவசியம். ஆனால், கோட்டைவிட்டார்கள். இப்பொழுது சரியா தப்பா என்று முடிவு செய்ய முடியாமல், மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

இங்கிலாந்து உலகக்கிண்ணப் போட்டிகளில் இடையில் வெளியேறியதற்கு, அணித்தலைவர் என்ற வகையில் நஸார் ஹுசைன் குற்றஞ் சாட்டப்படக்கூடும். ஆனால், அந்த நான்கு புள்ளிகள் இழக்கப்படக் காரணம் யார்? இங்கிலாந்து தன் தலையில் தானே மண்ணை வாரி அள்ளிப் போட்டுக் கொண்டது. மறுபுறம் மிகத் தாழ்நிலையில் இருந்த இங்கிலாந்து அணியை இந்தளவு தூரம் வளர்த்துவிட்டவர் நஸார் ஹுசைன் என்பதை மறந்து விடக்கூடாது. அவர் இங்கிலாந்து அணியை எந்தளவு கஷ்டத்தின் மத்தியில் வளர்த்தார் என்பதும், அவரது ஆளுமை எத்தகையது என்பது பற்றியும் ரிக்கி பொன்டிங் அருமையாக எடுத்துக் கூறியுள்ளார்.

நஸார் ஹுசைன் இருபக்கத் தாக்குதலுக்குள்ளான ஒரு தலைவர். ஒரு பக்கம் அணிப் பொறுப்பு, மறுபக்கம் அரசியலைக் கொண்டு வந்து உலகக்கிண்ணத்துக்குள் நுழைத்தது. இந்த இரு வகை அழுத்தங்களையும் மீறி உலகக் கிண்ணப்போட்டிகளில் மனதை ஒருங்கிணைத்துச் செயற்படுவது என்பது மிகக் கடினம். அது நஸாருக்கு மட்டுமல்ல என்பதை ECB புரிந்து கொள்ளுமா? தெரியவில்லை.

ஆனால், இங்கிலாந்தின் அடுத்த ஒருநாள் தலைவர் அவரா, இவரா அல்லது மற்றவரா என்று ஊகங்கள் முன்னிலைப்படுத்தப்படும்நிலையில், நஸார் ஒன்றைப் புரிந்து கொள்வார். அற்புதமான எந்தவொரு கிரிக்கெட் வீரனும் கிரிக்கெட் உலகை விட்டு மகிழ்ச்சியாக வெளியேறும்படி எந்தக் கிரிக்கெட் சங்கமும் நடந்து கொண்டதில்லை 'என்பதே அது.

- நர்மதா.

## இடைவேளை முடிந்தது



சச்சின் - ஓட்டங்கள் ஒருவித டேஸ்ட்.

இரு முதல்வர்களின் சந்திப்பு. சந்திப்பவர்கள் பொன்டிங், சனத். இடம் - SUPER SPORTS PARK CENTURIAN. அவுஸ்திரேலிய - இந்திய ஆட்டத்தின்பின் இந்தியாவில் உள்நாட்டு ரசிகளினால் கலவரம் ஏற்படக் காரணமாக அமைந்த மைதானம். ஆனால், இலங்கைக்கு இந்த மைதானம் புது வீடு புகுதல்.


இருவருமே இரண்டு பிரிவுகளால் முதலிடம் பெற்று SUPER SIX இன் முதல் ஆட்டத்தில் சந்திக்கும் அரங்கேற்றம். அவுஸ்திரேலியாவுக்கு இங்கிலாந்து கொடுத்த பேதியைத் தவிர விளையாடிய ஆறு ஆட்டங்களிலும் வெற்றி. இலங்கையைப் பொறுத்தவரையில், எல்லாம் இன்பமயம். ஆனால், கென்யா கொடுத்தது துன்பத்திலும் துன்பம். செய்த நன்மை தீமை, எல்லாப் பிறப்பிலும் தொடரும் என்று கூறுவது போல, முதலாவது லீக் ஆட்டத்தில் பெற்ற வெற்றி தோல்விகளின் புள்ளிகள் SUPER SIX இலும் தொடரப் போகின்றன.

இரு அணிகளுக்கும் தற்போதைக்கு ஆபத்தில்லை. ஆனால், பரஸ்பரம் யாரைக் கவிழ்ப்பது என்ற வியூகம் கடுமையாக வகுக்கப்பட்டிருக்கும். பயிற்றுநர்கள் இருவரும் அவுஸ்திரேலியர்கள் என்பது ஒரு சுவையான விடயம். இது தொழில் சார் விளையாட்டு, இப்படி எல்லாம் இருக்கத்தான் செய்யும்.

சரி, சமிந்த வாஸ் தன்னுடைய சாகசங்களை மேற்கிந்தியா, பங்களாதேஷ் அணிகளுடன் காட்டியதுபோல, அவுஸ்திரேலியாவுடன் காட்ட முடியுமா? ஹேடனில் இருந்து லீ வரைக்கும் படபடவென்று படம் ஓடுகிறது. முரளியின் சுழற்சி அவுஸ்திரேலியாவைக் கொஞ்சம் தயக்கமுறச் செய்யும், O.K. ஆனால், எவ்வளவு நேரம். அவுஸ்திரேலியாவிற்கு எதிரான பந்துவீச்சுக் குழுவினர் ரசிகர்களுக்கு அவ்வளவு நம்பிக்கை தருவதாக இல்லை.

இதேவேளை, இலங்கைத் துடுப்பாட்ட வரிசை அவ்வளவு லேசில் விட்டுவிடாது. இதற்கு முன்னைய ஆட்டங்கள் சான்று. சனத் நன்றாகச் செய்தால் எல்லாமே நன்றாக இருக்கும். அத்துபத்து, அரவிந்த நம்பிக்கை நட்சத்திரங்கள். மத்திய வரிசை உத்வேகத்துடன் செய்ய முயன்றால் நல்லதொரு ஆட்டம் ரசிகர்களுக்கு உண்டு.

இன்னொருபுறம், NEWLANDS CAPE TOWN இல் சந்திக்கிறார்கள் இந்திய அணியினரும் கென்ய அணியினரும். இந்தியாவுக்கு மைதானம் புதுசு, கென்யாவுக்கு ஒரு ஆட்ட அனுபவம். கென்யாவின் பயிற்றுநர் இந்தியரான சந்தீப் பட்டீல். இதில் முடிவு கூறுவதில் பெரிதாக எதுவும் இருக்கப் போவதில்லை. ஏனெனில் போட்டிகளின் ஆரம்பத்தில் கேலி பேசப்பட்டு, இப்பொழுது பெருவியப்புடன் நோக்கப்படுபவர்கள் இந்திய அணிவீரர்கள். HIGHTENSION WIRES. நெருங்குபவர்கள் நொருங்குவார்கள்.



ஒற்றுமையே எங்கள் பலம்.

சில ஆர்வத்துக்குரிய அவதானங்கள் - சச்சின் ஆரம்பத் துடுப்பாட்டவீரராக வருவது. இவருக்கு இப்போது பயங்கர MOOD. அணியில் அடக்கிவாசிக்கும் அழகு. கங்கூலியின் மென்போக்கு. வீரர்கள் அத்தனை பேரினதும் உணர்ச்சி மிக்க சகோதரத்துவம். பந்துவீச்சின் துல்லியம். மத்திய வரிசையின் நம்பகம். இவை, கென்யாவை அல்லாடவைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கென்யாவும் விடாப்பிடியாக துடிப்புடன் நின்றால் ஓரளவு நல்லதொரு ஆட்டத்தை எதிர்பார்க்கலாம். எனினும், இந்தியாவின் பக்கம் வாக்குகள் கூடுதலாக விழுகின்றன.

நான்கு அணிகளிடமும் ஒரு உரிமையான வேண்டுகோள் - எங்களுக்குத் தேவை SUPER CONTEST!

- ஜோசப் கிருஷ்ணா.



ஆசீர்வதிக்கிறோம் வீழ்த்து.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கைதிகளுக்கு நியாயம் கிடைப்பதற்கு உதவுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

## யாழ். ஆயர் அவசரச் செய்தி

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003**

**SUPER SIX முதலாம் நாள்**

ICC Cricket World Cup South Africa 2003

அவுஸ்திரேலியா Vs இலங்கை - SUPER SPORTS PARK CENTURIAN - 2 pm

இந்தியா Vs கென்யா - NEWLANDS CAPE TOWN - 6.30 pm



மட்டு. வவுணதீவு இராணுவ முகாம் தாக்குதலில் வீரச்சாவடைந்த 103 வேங்கைகளின் ஆறாம் ஆண்டு நினைவுநாள் நேற்று தரவையில் நடைபெற்றபோது- மூத்த தளபதி கேணல் கருணா தேசியக் கொடி யேற்றுவதையும், மகளிர் படையணியின் அணிவகுப்பையும் படங்களில் காணலாம்.

(யாழ்ப்பாணம்)

களுத்துறைச் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடாத்திவரும் கைதிகள் விடயத்தில் வேகமாகச் செயற்பட்டு அவர்களுக்கு நியாயம் கிடைப்பதற்கு உதவும்படி ஜனாதிபதியிடம் யாழ். ஆயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்படி வேண்டுகோள் அடங்கிய அவசர கடிதம் ஒன்றை யாழ். ஆயர் நேற்று தொலைநகல் மூலமாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இக்கைதிகள் விடயத்தில் மனிதாபிமானத்துடனும், அவர்களின் அடிப்படை மனித உரிமைகளை மதிக்கின்ற வகையிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் யாழ். ஆயர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரதமர் மற்றும் அமைச்சர்களான திலக் மாரப்பன, மிலிந்த மொறகொட ஆகியோருக்கும் இக்கடிதத்தின் பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(க)

## தமிழக மீனவர் விடுவிப்பு; எதிர்த்து கண்டனப் பேரணி

மன்னார் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை, மீண்டும் தமிழகத்திற்குத் திருப்பி அனுப்பியதை ஆட்சேபித்து, எதிர்வரும் திங்கட்கிழமை மன்னாரில் மாபெரும் கண்டனப் பேரணியை நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட மீனவர்களுள் றோலர் ஓட்டிகள் மற்றும் காயமடைந்தவர்கள் தவிர, ஒரு தொகுதியினர் நேற்றுக் காலை தமிழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்களின் பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வொன்றினை எடுக்காது, தமிழக மீனவர்களை அனுப்பியது தொடர்பாக, மன்னார் மாவட்ட மீனவர் சமூகம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கருத்துத் தெரிவிக்கையில், மன்னார்- பேசாலை கடற்பரப்பில் கடந்த 5 வருடங்களாக இந்திய மீனவர்கள் அத்துமீறிப் பிரவேசித்து தொழில் செய்து வருகின்றமையால் மன்னார் மீனவர்களின் வளங்கள் சுரண்டப்படுகின்ற போதும், இலங்கை மீனவர்களின் நலன்களுக்குச் சரியான தீர்வு கிட்டாது, அவர்களைத் திருப்பி அனுப்பியது கண்டனத்துக்குரியது எனக் குறிப்பிட்டார். இதனைக் கண்டித்து மன்னார் மாவட்டத்தில் நடைபெறவுள்ள கண்டனப் பேரணிக்கு அனைவரும் ஆதரவு தரவேண்டும் எனவும் கோரியுள்ளார்.

# ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழு இன்று கிளிநொச்சிக்கு விஜயம்

(கிளிநொச்சி)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உயர் அதிகாரிகள் அடங்கிய தூதுக் குழுவினர், இன்று கிளிநொச்சிக்கு வருகை தந்து அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனுடன் பேச்சு நடத்தவுள்ளனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் இலபாக்கி, ஆசிய வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கூணி ஆகியோர் அடங்கிய ஆசிய அபிவிருத்தி வங்கி உயரதிகாரிகளும், வட - கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ரங்கராஜா, நிக்கொட் திட்டப்பணிப்பாளர் லங்கா நேசன் ஆகியோரும் இன்று கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளனர்.

இன்று காலை 10.15 மணிக்கு கிளிநொச்சிக்கு வருகைதரும் இத் தூதுக்குழுவினர், 10.30 மணிக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுடன் பேச்சு நடாத்தவுள்ளனர்.

பின்னர் காலை 11.15 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை, ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் நாட்டி வைப்பார். தொடர்ந்து சிறான் அலுவலகத்தில் காலை 11.30 மணியளவில் சிறான் பணிப்பாளரை மேற்படி தூதுக்குழுவினர் சந்தித்துப் பேச்சு நடாத்தவுள்ளனர்.

தொடர்ந்து, கிளிநொச்சி மத்திய கல்லூரியை தூதுக்குழுவினர் பார்வையிடவுள்ளனர்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்நத அரசாங்க அதிபர்களும் கலநது கொள்ளவுள்ளனர்.

(லி)

## அருள் ஆச்சிரமத்தில் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தோமஸ் அடிகளின் வாழ்வும் பணிகளும் என்ற தொனிப் பொருளுடனான கண்காட்சியொன்று இன்று யாழ். அருள் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

### பரீட்சார்த்தமாக...

அடிப்படையிலாவது நீக்கிக் கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன்மூலம் படையினருக்குப் பாதகமான சூழல் ஏற்படுகிறதா என்பதையும், மக்களின் வாழ்வில் சுமுகநிலை ஏற்படுவதையும் அவதானித்து அதற்கு ஏற்ப அரசு நடந்துகொள்ள முடியும் என்று யாழ். ஆயர் மேலும் தெரிவித்தார்.

(க)

### 94 மீனவர்கள்...

இன்று பாக்குநீரிணைப் பகுதியில் வைத்து இந்தியக் கடலோரக் காவற்படையிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். இதையடுத்து இராமநாதபுரத்தில் தமிழக மீனவர் மேற்கொண்ட வீதிமறிப்புப் போராட்டம் மற்றும் உண்ணாவிரதப் போராட்டம் என்பனவும் முடிவுக்கு வந்தன.

### அன்ரன்....

சந்திப்புக்காக இன்று காலை வன்னி செல்லவுள்ள அதேவேளை - தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, இந்தியா சென்றிருப்பதால் - அவர், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளமாட்டார் எனத் தெரியவருகின்றது.

### மகளிர்...

நாடுகள், அமைப்புக்களிடமிருந்து நிதியுதவியைப் பெற்றுக் கொள்ளுதல், ஏப்ரலில் நடைபெறவுள்ள உயர்மட்டப் பேச்சுக்களில் உபகுழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்தல்.

அத்துடன், உபகுழுவானது ஏனைய உபகுழுக்களுடனும் சமாதான நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட ஏனைய அமைப்புக்களுடனும் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளை அவர்களது நடவடிக்கைகளில் சேர்த்துக்கொள்வதற்காகக் கலந்துரையாடல்களை மேற்கொள்வதுடன் நெருக்கமான தொடர்புகளையும் பேணும்.

சமாதான முயற்சிகளைத் தக்கவைத்தல், மீள்குடியேற்றம், தனிநபர் பாதுகாப்பு, உள்ளகக் கட்டமைப்பும்- சேவைகளும், சீவனோபாயமும் - தொழில் வாய்ப்பும், அரசியல் பிரதிநிதித்துவம், தீர்மானமெடுத்தல், இணக்கப்பாடு போன்ற விடயங்களில் இந்த உபகுழு கவனம் செலுத்தவுள்ளது.

சிறான், யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளவுள்ள துரிதப்படுத்தப்பட்ட மீள்குடியேற்றத்திட்டம், மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளவுள்ள அதிவேக மீள்குடியேற்றத் திட்டம் ஆகியவற்றுடன், வட - கிழக்கில் தற்போது நடைமுறையிலுள்ள மீள்குடியேற்றத் திட்டங்களுடனும் இந்த உபகுழுவானது இணைந்து செயற்படும்.

கிழக்கில் இடம்பெற்றுவரும் மீள்குடியேற்றத் திட்டத்தைச் செயற்படுத்த சிறானுக்கு உத்வேகமளிப்பது.

கிளிநொச்சியில் உளநலம் பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பாக சிறான் மேற்கொள்ளவுள்ள திட்டத்திற்கு ஆதரவளிப்பதுடன், போரினால் பாதிக்கப்பட்ட ஏனைய மாவட்டங்களிலும் அவ்வாறான நிலையங்களை அமைப்பதற்கு சிறானிற்கு ஊக்கமளித்தல் மற்றும்,

ஏனைய உபகுழுக்களிற்கு மகளிர் விவகாரம் தொடர்பான திட்டங்களை உருவாக்க வழிகாட்டுதல் என்பன அத்தீர்மானங்களாகும்.

இந்த உபகுழுவின் அடுத்த சந்திப்பு ஏப்ரல் 4 ஆம், 5ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் இடம்பெறும். இருப்பினும் சமாதானத்தின் முன்னேற்றத்தைப் பொறுத்தே எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள சந்திப்புக்களுக்கான இடங்கள் பற்றித் தீர்மானிக்கப்படும் எனவும் உபகுழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## கொழும்பில் நடக்கும்...

சில தினங்களாகத் தலைநகரில் உள்ள முன்னணி வர்த்தக நிலையங்களில் கடமைபுரியும் தமிழர்களைப் பதியுமாறு விண்ணப்பப் படிவங்கள் பொலிஸாரினால் விநியோகிக்கப்பட்டன. ஆனால், அவ்வாறு தமிழர்கள் பொலிஸில் பதியத் தேவையில்லை என்றும், விநியோகிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை நிராகரிக்குமாறும் போதி லியனகே கூறியிருந்தார். ஆனால், நேற்று மீண்டும் அவ்வாறு விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. மனோ கணேசன் எம்.பி. இதுபற்றி போதி லியனகேயிடம் முறையிட்டபோது, அவ்வாறான விண்ணப்பப்படிவங்களுக்கும் பொலிஸாருக்கும் தொடர்பில்லை என்று போதி லியனகே வலியுறுத்தியிருந்தார். சில பொலிஸாரின் தன்னிச்சையான நடவடிக்கைகளைப் பொருட்படுத்த வேண்டாம் என்றும் அவர் கேட்டிருந்தார் என்று தெரிவித்த மனோ கணேசன் எம்.பி., அவ்வாறு போதி லியனகே தெரிவித்த கருத்து வேடிக்கையானது என்றும் அது பொலிஸாரின் இரட்டை வேடம் என்றும் கூறினார்.

பம்பலப்பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டபோது, அவரும் அதனை நிராகரித்திருந்தார். ஆனால், விண்ணப்பப்படிவம் வழங்கிய பொலிஸாரும் பம்பலப்பிட்டிய பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர் என மக்கள் தன்னிடம் முறையிட்டதாகவும் சுட்டிக்காட்டிய மனோ கணேசன் எம்பி, அப்பட்டமான முறையில் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி பொய் சொல்லியிருப்பதாகவும் குற்றஞ்சாட்டினார்.

இது குறித்துப் பிரதமரிடம் தான் முறையிடப்போவதாகவும் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார். (200)

## களுத்துறையில்...

னர், உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியற்கைதிகளை, உண்ணாவிரதத்தை கைவிடும்படியும் தாம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்ததுடன், சட்டமா அதிபருடன் தாம் நடாத்திய பேச்சின்போது வட-கிழக்குப் பகுதிகளில் குற்றஞ்சாட்டப்பட்ட கைதிகளின் வழக்குகளை அந்தந்தப் பகுதி நீதிமன்றங்களுக்கு மாற்றுவதற்கு உறுதி அளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமது அரசியற்கைதிகள், நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தியிடம், தம்மைப் பிணையில் விடுதலை செய்யும்படியும் அல்லது தம்மை வட- கிழக்குப் பகுதிகளிலுள்ள சிறைச்சாலைகளுக்கு இடமாற்றி அங்குள்ள நீதிமன்றங்களில் வழக்கினை நடாத்தும்படியும் கோரினர். எனினும், தாம் மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகையைச் சந்தித்த பின்னர் தான் உண்ணாவிரதப் போராட்டம் பற்றிய இறுதி முடிவை எடுக்கவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட ரகுபதிசர்மா என்ற கைதி மயக்கமடைந்துள்ளார். சிவனேஸ்வரன் என்பவர் நெஞ்சடைப்பு நோய் காரணமாக நாகொடை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை - தமது போராட்டத்திற்கு ஆதரவாக மக்கள் அமைப்புக்களும் மாணவர்களும் இணைந்து பரந்தளவிலான போராட்டங்களை நடாத்துமாறும் - இது தமது மிக உருக்கமான வேண்டுகோள் எனவும் ஊடகங்களுக்கு தமிழ் அரசியற் கைதிகள் எழுதியுள்ள கடிதமொன்றில் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கைதிகள் போராட்டம் பற்றிக் கருத்துத் தெரிவித்த களுத்துறைச் சிறையின் பொறுப்பதிகாரி சாந்த கொட, கைதிகளின் நிலை மிகப் பரிதாபகரமாக இருப்பதாகவும், எவராவது தலையிட்டு அவர்களது போராட்டத்தைத் தணித்து அவர்களின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க -இறுதியாகக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் - மன்னார் ஆயர் இராயப்பு யோசப்பும், அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் பேனாட் குணதிலகவும் இன்று களுத்துறைக்கு விஜயம் செய்யவிருப்பதாகத் தெரியவருகின்றது.

## எமது மக்களின்...

பிரச்சினைகளை, தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும் எனக் கேட்டிருக்கிறோம்.

எமது மக்கள் சமாதானத்துடனும், சமாதான எதிர்பார்க்கையுடனும் இருக்கின்றார்கள். ஆனால், அந்த நம்பிக்கைக்கும் எதிர்பார்ப்பிற்கும் அச்சுறுத்தலைத் தருவது சிங்கள பேரினவாத சக்திகளுடைய செயற்பாடுகள். ஆகவே, அரசதரப்புப் பிரதிநிதிகளிடம் சிங்களப் பேரினவாத சக்திகளின் செயற்பாடுகளை எதிர்த்து, சிங்கள மக்களிடையே சமாதானத்திற்கான தேவைகளை உணர்த்திப் பிரசாரம் செய்ய வேண்டும் எனக் கோரியுள்ளோம். சிங்கள மக்களைச் சமாதான செயற்பாட்டுக்காக அணிதிரட்ட வேண்டிய பொறுப்பு இப் பெண்களுக்கான உபகுழுவின் அரசதரப்புப் பிரதிநிதிகளுக்கு உண்டு என வலியுறுத்தியுள்ளோம்.

சமாதான நடவடிக்கைகள், அதன் முன்னேற்ற முயற்சிகளின் அடிப்படையில் பெண்களுக்கான உபகுழு மிகவும் முக்கியமானது. அடக்கப்பட்ட எமது மக்களின் உணர்வுகளை வெளியுலகமோ அல்லது தென்னிலங்கை மக்களோ புரிந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இந்தச் சமாதான சூழ்நிலையில் எமது தேவைகள், உணர்வுகள், பிரச்சினைகளை தென்னிலங்கைக்கும் சர்வதேசத்துக்கும் முன்வைக்கச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

மேலும் - இதுவரை காலமும் யுத்தம் - பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் எவ்வாறு சுமைகளையும், பிரச்சினைகளையும் ஏற்படுத்தியுள்ளது என்பதனை கவனத்தில் எடுத்து மகளிர் விவகார உபகுழு, அதற்குரிய புனர்வாழ்வுத் தேவைகள், அபிவிருத்தித் திட்டங்களை சிறான் குழுவிற்கும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் உபகுழுவிற்கும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் உயர் மட்டக்குழுவிற்கும் எடுத்துக் கூறுவதற்கு வழிசெய்யும் எனவும் அவர் தெரிவித்தார்.

(லி)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.